505

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 DEC 1948
MADRAS

505

ஸர்வதாரி ஹு
மார்கழி மீ

ஸம்புடம் - 7
ஸஞ்சிகை - 12

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்கு மிடம் :

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

JL
Q22m21', N41
N48.7.12

வர்ஷச் சந்தா:
ரூபா 3—0—0

December 1948
Vol. 7 No. 12

189253

விஷய ஸூசிகை.

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	310
2.	ப்ரஹ்ம லக்ஷண விஷயமான ஸம்சயத்துக்கு ஸமாதானம்	313
3.	நற்போது போக்கு	315
4.	மதுராலாபம்	318
5.	நமது ஆசாரங்களும் அநுஷ்டானங்களும் ...	321
6.	மாறன் மகிழ்ந்த மாக்கவி	327
7.	செய்திகள்	330
8.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	334
9.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	335

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வதாரி ௵ மார்கழி ௴	ஸஞ்சிகை 12

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாந: ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

129253
தொ. 600

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்³ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

ராஜா:—[ஹர்ஷத்துடன் ஸேவித்து]

“ நிகடேஷு நிஶாமயாமி நித்யம்
நிக³மாந்தேஷ்வபி நாவிகா³ஹ்யமாநம் ।
யது³ராஜகுமாரமஸ்ய பா³லகேலிம்
யது³நாத²ஸாக்ஷிக யஶோத³நந்த³நம் ॥ ”

என்று ஸ்திதுக்கிறார். இது கோபால விம்ஶதி ச்லோகம். ஆறுவது அங்கத்தில், அதிலிருந்து இரண்டு ச்லோகங்கள் படிக்கப்பட்டன. வடமதுரையில் பாடுவதாக அபிமானித்து இங்கே தமிழ் நாட்டில் பாடிய பாடல்களை வடமதுரையையே நாடகத்தில் ஸேவிக்கையில் அங்கே பாடா திருக்க முடியுமோ ? கண்ணனது அவதாரத்தை அநுபவிக்கையில் இங்கே இரண்டு ச்லோகங்களைப் படிக்கிறார். ஒன்பதாவது அங்கத்தில், ‘ ஜயதாஹித ஶாப வம்ஶநாத²: ’ என்ற ச்லோகத்தை நாரதர் வீணையில் பாடுவதாகப் படிக்கப்படுகிறது. இந்த ‘நிகடேஷு’ ச்லோகம் ஏழாவதாகும். இதற்கு முன் ச்லோகத்தில் உலூகலத்தில் கட்டுண்டு அப்பெரிய உரலை விளையாட்டாக இழுத்துக்கொண்டு போகும் குழந்தையை ‘ விவஶோ மாமவது க்ஷிதீஶ: ’ என்று அநுபவித்தார். குந்தி, ஆழ்வார், ஆழ்வான் முதலியவர்களை மோஹிப்பித்துத் தன் நினைவை மறந்து பரவசமாக்கியது இந்த வ்ருத்தாந்தம். ‘ த்யாநமாகிய கடிய காதல் முற்றி எங்கும் கண்ணனையே பார்ப்பதாக ஸாக்ஷாத்காரம் போன்ற அநுபவம் வந்து, அங்கு மிங்கும் எங்கும் முற்றும் ஓயாமல் நித்யமும் கண்ணனை அருகிலேயே கண்களால் காண்கிறேன்’ என்கிறார். ‘நிகடேஷு’, ‘தத்³தூ³ரே தத்³வந்திகே’. ‘நிகடம்’ என்பது ‘ அந்திகம் ’ ‘ ஸமீபம் ’ என்று பொருள்படும். ‘ அது (ப்ரஹ்மம்) தூரத்தி லுள்ளது; அதுவே அருகி லுள்ளது’ என்று உபநிஷத் கூறிற்று. ‘பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்’ என்று ஆழ்வார், ‘அது யாருக்கு தூரத்தி லுள்ளது? யாருக்கு அருகிலுள்ளது?’ என்பதைத் தெளிவித்தார். உரலிடை யாப்புண்ட வ்ருத்தாந்தத்தைப் பாடியதும், அந்த எளிவை நினைந்து உருகி பக்தி வளர்ந்து கண்ணனை எங்கும் நாலு பக்கங்களிலும் அருகில் காணும் பாக்யம் உண்டாயிற்று.

‘ ப்³ரஹ்மைவேத³மம்ருதம் புரஸ்தாத்³ ப்³ரஹ்ம பஶ்சாத்³ ப்³ரஹ்ம த³க்ஷிணதஶ்சோத்தரேண ।
அத⁴ஶ்சோர்த்⁴வம் ச ப்ரஸ்ருதம் ப்³ரஹ்மைவேத³ம் விஶ்வமித³ம் வரிஷ்ட²ம் ॥ ’

என்று முண்டகோபநிஷத்தில், பக்திக் காதல் முற்றும்பொழுது ஆநந்த மூர்த்தியான ப்ரஹ்மம், ‘ இதோ எதிரே, இதோ பின்னே, இதோ தெற்கே (வலது

புறம்), இதோ வடக்கே (இடது புறம்), இதோ மேலே, இதோ கீழே' என்று சுற்று முற்றும் காணப்படுகிறது. 'விச்வம் முழுவதும் ஸர்வோத்தமமான ப்ரஹ்மமாகவே காணப்படுகிறது' என்று காட்டிய அநுபவம் வந்து இங்கே இப்படிப் பாடுகிறார். கட்டுண்ட பகவானை த்யானம் செய்தால் ஸகல ஸம்ஸாரக் கட்டுக்களும் அவிழ்ந்துவிடும்; பாரமாய பழவினை பற்றறும். கர்ம பாசங்கள் அற்றுப்போனால் ஞானம் பூர்ண மலர்ச்சி பெற்று எங்கும் ப்ரஹ்மமாக ப்ரஹ்மக் காட்சி கிடைக்கும். வேதாந்தங்கள் ப்ரஹ்மத்தைத் தேடிக்கொண்டிருக்கின்றன. 'ஸோऽந்வேஷ்டவ்ய:' 'தத³ந்வேஷ்டவ்யம்'. அவை தேட வேண்டும் தேடவேண்டும் என்று சொல்லிக்கொண்டேயிருக்கின்றன. வேதங்கள் ப்ரஹ்மத்தைக் காட்டும் கண்கள். அக்கண்கள் தேடிக்கொண்டேயிருக்கின்றன. என் கண்களோ வென்றால் எப்பொழுது மெங்கும் கிட்டேயுள்ளதாகக் காண்கின்றன. இதென்ன விந்தை! ஈதென்ன கருணை! 'யமலார்ஜுநத்³ருஷ்ட பாலகேலிஷு'—யசோதையின் அரண்மனையில் தவழ்ந்து விளையாடும் சைசவத்தில் நடந்த விளையாட்டுக்களை யெல்லாம் வீட்டு வாசலிலிருந்த இரட்டைப் பிள்ளைகள் போன்ற ஜோடியான இரண்டு மருத மரங்களும் பூர்ணமாகப் பார்த்துக்கொண்டிருந்தன. நளகூபரன் மணிக்ரீவன் என்னும் இருவர் குபேரனுடைய பிள்ளைகள். அவர்கள் நாரதர் வரும்பொழுது வஸ்த்ர மில்லாமல் நிர்வாணமாய்க் கங்கையில் முழுகி விளையாடிக்கொண்டிருந்தார்கள். இதென்ன செல்வக் கொழுப்பு! இவர்களுக்கு சாபத்தால் கஷ்டமுண்டாக்கிப் புத்தி புகட்டவேண்டு மென்று, 'ஜோடியான மருத மரங்களாக நந்தகோபர் வீட்டு வாசலில் உண்டாகக்கடவீர்' என்று சபித்தார். அவர்களுக்குக் கண் பார்வையும் உள் ஞானமும் மட்டிலும் மாறாம லிருக்கும்படி அநுக்ரஹித்தார். அவர்கள் தேவர்களாகையால் கண்களைக் கொட்டாமல் கண்ணனையும் கண்ணன் திருவிளையாடல்களையும் ஸதா பார்த்து மகிழ்ந்துகொண்டேயிருந்தார்கள். 'ஸஹகாரீ நாமஜே த' என்பர். அங்ஙன மின்றி, இருவராய் ஜோடியாயிருந்து பார்த்து ரமிக்கும்படிக்கும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு இந்த ஸந்தோஷத்தைச் சேர்ந்து அநுபவிக்கும்படிக்கும், ஸஹோதரர்கள் இருவருக்கும் ஏகீபவித்யாய் அநுபவ பாக மிருக்கும்படிக்கும் சேர்ந்ததில் உண்டான மகிழ்ச்சியை 'யமள' என்கிற சொல்லால் காட்டுகிறார். இந்தக் கோபால விம்சதியில் க்ருஷ்ணனுக்குப் பஞ்ச ப்ராணனாய் அவரை ஸ்நேஹித்த பஞ்ச பாண்டவர்களில் 'யமளர்கள்' [இரட்டைப் பிள்ளைகள்] என்கிற நகுல ஸஹதேவரையும் அர்ஜுநனையும் ஆக மூன்று ப்ராணன்களைக் குறிக்கும் ரஸமும் கிடைக்கிறது. மாத்ரி பிள்ளைகள் இருவர்; குந்தி பிள்ளைகளில் ஒருவன். இம்மர ஜோடி யசோதை வீட்டு வாசலிலிருந்து அக்காலத்தில் பார்த்து அநுபவித்த சைசவ லீலைகளையெல்லாம் நான் இன்று இங்கேயிருந்து எப்பொழுதும் கண்களார ஸேவித்துக் கொண்டேயிருக்கிறேன். இந்தக் குழந்தைப் பருவ லீலைகளை மட்டுமா? கொஞ்சம் பிராயம் ஆகி வெளியே யமுனைக் கரைக்குக் கறவைகளுடனும் கோப கோபியருடனும் சென்றபோது அங்கே யமுனை யென்னும் ஸூர்ய புத்ரியான தேவப் பெண் கண்ணைக் கொட்டாமல் காதலுடன் கண்ட எல்லா யௌவந லீலைகளையும் நான் எப்பொழுதும் காட்சியாக

அநுபவித்துக்கொண்டிருக்கிறேன். யமுனைக் கரையில் யௌவந க்ரீடைகளை மருதமரங்கள் கண்டதில்லை. அவர்கள் மகிழ்ந்து ஸேவித்த ஶைஶவ லீலைகளை யமுனை பார்க்கவில்லை. நான் எல்லாவற்றையும் சேர்த்துக் கோபாலன் அருளால் என் அருகிலேயே எப்பொழுதும் ஸேவித்துக்கொண்டிருக்கிறேன். காலோபாதியைக் கழித்துவிட்டு எனக்குத் திவ்ய ஞானக் கண்களைத் தந்து இக்காட்சி தருகிறார்.

வ்யவஸாயன்:—இங்கே வாஸுதேவனுடைய இடது பார்ச்வத்தில் எழுதியுள்ள அக்ஷராவளியைக் கடாக்ஷிக்கவேணும்:—

" ஜயதிஜ்ஜ்விதவ்ருத்திம் ஶிக்ஷிதோ வல்லவீநாம்
ஶிதிலவலய ஶிஂஜா ஶீதளைர் ஹஸ்ததாளை: ।
அகிலபுவந ரக்ஷா கோபவேஷஸ்ய விஷ்ணோ
ரதர மணிஸுதாயாம் அஂஶவாந் வஂஶநாள: ॥ "

'ஜயதி' என்று ராஸக்ரீடை உத்ஸவத்திற்குப் பல்லாண்டு (மங்களம்) பாடுகிறார். ப்ருந்தாவந லீலைகளில் அதுவே ஶிகரம்; முடிவு. 'சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே' என்று பரமபதத்தில் இந்த ராஸ க்ரீடோத்ஸவாநுபவம். இதன் பிறகு வேணு காநம் கிடையாது. அதற்காக ஒரே ராத்ரியில் அநந்த கண்ணன்களுடைய அநந்த வேணுகாந உத்ஸவம். இனிமேல் வேணு பாடாததால், அதற்குப் ப்ல்லாண்டு பாடுகிறார். இந்த ராஸ உத்ஸவத்தில் வேணு வென்னும் வாத்யத்தின் வ்யாபாரம் மிகுந்து வேணுவுக்கு முக்யமான பங்கு கிடைத்தது. நர்த்தநக் கேளிக் கச்சேரியில் கிடைக்கும் ஸம்மாநத்தில் ஒவ்வொரு வாத்யக்காரருக்கும் நர்த்தகிகளுக்கும் குறிப்பிட்ட பாகங்கள் கொடுக்கப்படும் வ்யவஸ்தை உண்டு. இந்த ராஸ நர்த்தநத்தில் ஸம்மாநம் யாதெனில்: பகவானுடைய அதராம்ருதமே. அப்பொழுதைக் கப்பொழுது இவ்வாராவமுதம் ப்ரீத்யாவேஶத்தால் யதேஷ்டமாகக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நர்த்தகிக்கும் இரு பாரிசங்களிலும் இரண்டு க்ருஷ்ணர்கள். நினைத்தபோதெல்லாம் இவ்வதராம்ருதம் கிடைக்கிறது. வேணுவைத் திருப்பவளத்தில் வைத்துக் கொண்டு காநம் செய்வதால் வேணுவுக்கும் அதராம்ருதத்தில் பாகத்திற்குக் குறைவேயில்லை.

' கோப்ய: கிமாசரதயம் குஶலம் ஸ்ம வேணு:
தாமோதராதரஸுதாமபி கோபிகாநாம் ।
புங்க்தே ஸ்வயம்....'

' கோபியரே ! இந்த வேணு என்ன புண்யம் பண்ணிற்றோ ? கோபியரான நமக்கே உரித்தான கண்ணன் வாயமுதத்தை—சேய்த்தீர்த்தமாய் நின்ற செங்கண்மால் தன்னுடைய வாய்த் தீர்த்தத்தை—பதினாறு மாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப, மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்தன் வாயமுதம், பொதுவாக உண்பதனைத் தானே புக்குப் பருகுகின்றதே' என்று கோபியர் அஸூயைப்படுவர்.

ஏழாம் அங்கம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ப்ரஹ்ம லக்ஷண விஷயமான ஸம்சயத்துக்கு ஸமாதானம்

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, B.A., B.L.,
அட்வோகேட், திருப்பாப்புலியூர்.]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் நாளது ஸர்வதாரி௵ ஐப்பசி௴ ஸஞ்சிகை 269—271 பக்கங்களில், ‘ஜந்மாத்யஸ்ய யத:’ என்கிற இரண்டாவது ப்ரஹ்ம ஸூத்ரத்தின் ஔசித்யத்தைக் குறித்து ஸம்பாதக ஸ்வாமியால் ஒரு ஸந்தேஹம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு இங்கு யதாமதி ஸமாதானம் சொல்லப் படுகிறது.

“ப்ரஹ்ம ஸூத்ரகாரர் ௸ ஸூத்ரத்தில் ப்ரஹ்மணோ ஜகத்காரணத்வத்தை ப்ரதிபாதிக்கும் ‘யதோ வா இமானி பூதானி ஜாயந்தே’ இத்யாதியான ச்ருதியையே விஷய வாக்யமாக விவக்ஷித்திருப்பது ஸ்பஷ்டமாவதால், ப்ரஹ்மத்தின் ஸ்வரூப நிரூபக தர்மங்களை ப்ரதிபாதிக்கும் ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம’ என்கிற ச்ருதியை அநாதரித்ததுபோல் தோன்றுகிறதே; இது எப்படி ஸமர்த்தநார்ஹம்?” என்பதுதான் ஸம்பாதகர் உத்தாபநம் செய்திருக்கும் ஶங்கையின் ஸாராம்ஶமென்று தோன்றுகிறது. இதற்கு ஸமாதானம்:—

ப்ரஹ்ம ஸூத்ரகாரருடைய லக்ஷ்யமே விவாத க்ரஸ்தமான அத்யாத்ம விஷயங்களைப் பற்றி பரபக்ஷ ப்ரதிக்ஷேப பூர்வமாக ஸ்வஸித்தாந்த ஸ்தாபநமாகையால், நிர்விவாதமாக எல்லா மதங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களைக் குறித்து ஸூத்ரம் ப்ரவர்த்திக்க ப்ரஸக்தியில்லை. ஆகையால் ப்ரஹ்மத்தின் ஸத்யத்வ ஜ்ஞாநத்வாநந்தத்வ விஷயமாய் ஆஸ்திக மதங்கள் எதிலும் விவாதமில்லாததாலும், ஜகத்காரணத்வ விஷயமாய்ப் பற்பல விகல்பங்கள் ௸ மதஸ்தர்களால் செய்யப்படுவதாலும், இவ்விகல்பங்களைப் போக்கி ப்ரஹ்மமே ஜகத்துக்கு உபாதாந காரணமும் நிமித்த காரணமுமாய் நிற்கிறதென்பதே ஸமஸ்த ச்ருதி ஸம்மதமான நிர்ணயம் என்று ௸ இரண்டாவது ஸூத்ரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம’ என்கிற ச்ருதியை ஸூத்ரகாரர் உபேக்ஷித்தார் என்பது உபபந்நமாகாது. இங்கு அவரது உத்தேஶத்துக்கு அது அப்ரஸக்தமாகையால் அவர் அப்ரஸக்த ப்ரஸஞ்ஜநம் செய்யாதது உசிதமென்றே கொள்ளவேண்டியதாகிறது. ச்ருதியில் காரண வாக்யத்தால் ப்ரதிபந்நமான உபாதாநத்வ ப்ரயுக்தமாய் உபாதேயமான ஜகத்துக்குள்ள தோஷங்கள் ததுபாதாந காரணமான ப்ரஹ்மத்திலும் ஸம்பாவ்யமாகுமே என்கிற ஶங்கையை நிவாரணம் செய்வதற்காக நிஷ்க்ருஷ்ட ப்ரஹ்ம ஸ்வரூபத்துக்கு நிரூபகமான தர்மங்கள்

'𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' என்று ப்ரபஞ்சிக்கப்பட்டன. இதை '𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌕𑌾𑌰𑌣𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌭𑌿𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறார். இவ்விரண்டு வாக்யங்களாலும் ப்ரஹ்மத்துக்கு அஸாதாரணமான ஆகார த்வயம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறதென்று ஜந்மாத்யதிகரண ச்ருத ப்ரகாஶிகையில் '𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌜𑌾𑌤𑍇𑌷𑍍𑌵𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌤𑌰𑍇𑌣 𑌵𑌾, 𑌤𑌜𑍍𑌜𑌾𑌤𑍀𑌯𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌲𑌕𑍍𑌷𑌣𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌤𑌰𑍇𑌣 𑌵𑌾' என்பதால் விஶதீகரிக்கப்பட்டிருக்கிறது.

ஸம்பாதக ஸ்வாமி 270-வது பக்கத்தில், '𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿' இத்யாதி வாக்யம் ஜகதுபாதாநத்வத்தை மாத்ரம் பேசுகிறதென்றும், '𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂' இத்யாதி வாக்யம் ஜகந் நிமித்தத்வத்தை ப்ரஸ்தாவிக்கிறதென்றும் கூறியிருப்பது யுக்தமாகத் தோன்றவில்லை. '𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿' இத்யாதி வாக்யத்திலேயே உபாதாநத்வமும் நிமித்தத்வமும் ப்ரதிபாதிக்கப்படுகின்றன. '𑌸𑌾𑌰𑍍𑌵𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌿𑌕 𑌤𑌸𑌿𑌲𑍍:' ப்ரத்யயத்தால் காரண ஸாமாந்யம் நிர்த்திஷ்டமாகையால், உபாதாநத்வ மாத்ரத்தில் அதன் தாத்பர்யத்தை ஸங்கோசிப்பது ஸரியல்லவென்று தோன்றுகிறது. இந்த ச்ருதி வாக்ய ஶைலியை அநுஸரித்தே ஸூத்திலும் 𑌯𑌤𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌂 காரண மாத்ரார்த்தமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதால் அங்கும் காரணத்வயமும் விவக்ஷிதம். '𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇' என்பது '𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌦𑍇𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿' இத்யாதி வாக்யங்களின் அநுவாத ரூபமாகையால், அங்குக் கண்டோக்தமான உபாதாந நிமித்த ரூப காரணங்களிரண்டும் இங்கும் விவக்ஷிதங்களேயென்பது ஸ்ரீ பாஷ்யத்திலும் ச்ருத ப்ரகாஶிகையிலும் நிர்ணீதமான விஷயம். '𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂' இத்யாதி வாக்யம் முன் சொன்னபடி ஜகத் காரணத்வ ஸம்பத்தமல்ல. கிந்து: ஜகத் காரணத்வத்தால் ஸம்பாவ்யமான தோஷத்தைப் பரிஹரிப்பதற்காக உபாத்தமானது. ஆகையால் இவையிரண்டும் வெவ்வேறான ஆகாரங்களைக் குறிப்பதால் இரண்டும் சேர்ந்தே பூர்ணமான காரணத்வத்தை லக்ஷிக்கின்றனவென்பது உபபந்நமல்ல. இதை வைத்து 'வ்யாஸ பகவான் ஒன்றைவிட்டு மற்றொன்றை விசேஷித்துக் கொள்ளக் காரணம் ஒன்றுமில்லையே' என்பது ஸுதராம் அநுபபந்நம்.

மேலும் '𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿' ஸூத்ரத்தால் நிமித்த காரணம் உபலக்ஷிதமாகிறதென்பது சரியாகத் தோன்றவில்லை. மேற்கூறியபடி அதில் இருவித காரணங்களும் ஸாக்ஷாத் விவக்ஷிதங்களென்பதே ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளம். அதுவே காரணவாதியான ச்ருதி வாக்யங்கள் எல்லாவற்றையும் பரிசீலநம் செய்தால் நிஷ்க்ருஷ்டமாய்த் தேறி நிற்கும் தத்வம்.

" இரண்டாவது லக்ஷணம் சுத்த ஸ்வரூப மாத்ரத்தில் நிஷ்டை பெற்றிருந்தாலும், ஸர்வஜ்ஞத்வம் நியந்த்ருத்வம் முதலிய குணங்களை ஆதாரமாகக் கொண்டு சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்மம் ப்ரதீதிக்கு வருகிறபடியால் அது உபா

தாந காரணத்வத்தை உபலக்ஷிக்கிற தென்று ஏன் உபபாதிக்கக்கூடாது?'' என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்விக்கு ஆதாரம் என்ன வென்று புலப்படவில்லை. ஶோதக வாக்யத்துக்கு நிஷ்க்ருஷ்டாகாரமே விஷயமாயிருக்க, அதில் சிதசித் விஶிஷ்டத்வ ப்ரதீதியாவது ஜகதுபாதாநத்வ ப்ரதீதியாவது ப்ரஸங்கிக்க இடமில்லை யென்று தோன்றுகிறது. இவ்வகையில் இதற்குமேல் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளும் தத்தோத்தரங்க ளாகின்றன. 'ஜீவஃவஷ் ஷூாணஞிஜூாஜ' இத்யாதி ஸூத்ரத்தை இந்த ப்ரகரணத்தில் உதாஹரிப்பதின் பொருத்தம் ஏற்படவில்லை. அங்கு உபாஸா த்ரைவித்யத்தைப் பற்றிப் பேசும்போது அந்தந்த உபாஸ்யாகாரங்கள் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. ப்ரஹ்ம ஸ்வரூபத்தைப் பற்றி நிராபாயமான ஸஉஹு ஜ்ஞாநத்தை உபதேஶிப்பதற்காக ப்ரவ்ருத்தமான வாக்யங்களை விசாரிக்கும் ஸந்தர்ப்பத்தில் அதற்கு எப்படி ஸங்கதி என்பது தெரியவில்லை. இதை யெல்லாம் பர்யாலோசனை செய்யுமிடத்து, 'யதொவா ஊஉாநி' இத்யாதி காரண வாக்யத்தில் நிமித்தோபாதாந ரூபோபயவித காரணத்வமும் விவக்ஷிதம் என்றும், 'ஸதூ° ஜூாநஃ' இத்யாதி ஶோதக வாக்யத்தில் காரண வாக்யத்தால் ஜகத்காரணமாக ப்ரதிபந்நமான ப்ரஹ்மம் நிர்த்தோஷ மென்றும், ஸத்ய ஜ்ஞாநாதி குணமய மென்றும், இவ்விரண்டு வாக்யங்களும் ஸப்ரயோஜந மாகையால் அவச்ய மென்றும், அந்யதரத்தைக் கொண்டே சாரிதார்த்யம் ஏற்படமாட்டா தென்றும் நிர்ணயிக்க வேண்டியதாகிறது.

ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி இவ்வித ஶங்கைகளை ஶாஸ்த்ர விசார ப்ரக்ரியையை ஸந்துக்ஷணம் செய்வதற்கென்றே வெளியிட்டு வருவதால், இதில் என் போலியர் ஏதோ அஜ்ஞாத ஜ்ஞாபநம் செய்வதாக ப்ரமிக்க இடமில்லை யென்பதையும் ஸவிநயம் விஜ்ஞாபநம் செய்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

நற்போது போக்கு

[இவ்யாஸம், செந்தமிழ் மொழியில் 71-படலங்கள் கொண்ட ஸ்ரீ பாத்மோத்தர புராணத்தில் நரமடங்க லெழுந்த படலத்தினின்றும் தொகுத்து எழுதப்பட்டது]

தேவர் மனிதர் விலங்கு முதலிய ப்ராணிகளாலும் ஆயுதங்களாலும் பகலிலும் இரவிலும் பூமியிலும் வானத்திலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரண மில்லாதபடி வரம்பெற்ற ஹிரண்யகசிபு, தன் வரபலத்தாலும் செல்வச் செருக்காலும் தேவர் முதலிய யாவர்க்கும் கொடுமை இயற்றித் தன்னையே கடவுளாக வணங்கும்படி செய்துவந்தான். அவனது குமாரனை ப்ரஹ்லாதாழ்வான் கருவிலே திருவுடையவனாய் இளமை தொடங்கி எம்பெருமானிடம் பக்திப் பெருங்காதல் கொண்டு, தந்தையின் கட்டளைப்படியே அவன் பெயரைச் சொல்லிக் கல்வி

ஹிரண்ய கசிபுவின் வரபலமும் அவன் இயற்றி வந்த இன்னல்களும்

கற்காமல் நாராயண நாமத்தையே பயின்றுவர, அதனைக் கண்டு கடுங்கோபங் கொண்ட ஹிரண்யன், அவனைத் தன் வழிப்படுத்தற்குப் பல்படி கொல்ல முயன்றும் அவன் பகவான் அருளால் இறவாமல் இருக்க, ஒரு நாள் மாலைப் பொழுதில், கண்களில் தீப்பொறி பறக்கப் பற்களைக் கடித்துச் சினம் தலைக் கேறியவனாய்ப் ப்ரஹ்லாதனை நோக்கி, 'நீ சொல்லியவன் எங்கே வாழ்பவன்? அவன் யாண்டுளான்? அவனை என்முன் காட்டாயேல் இன்று உன் உடல் பொடியாம்படி உன்னைச் சிதைப்பேன்' என்று பதைத்துக் கூற, தானவ சிசு சொல்வான்:—'என் ஐயனே! வாஸுதேவன் என்னும் திருநாமமுடைய திருமால் நித்ய விபூதியில் மூன்று கூறாகி, இந்த லீலாவிபூதியில் ஒரு கூறாகி எங்கும் நிறைந்துள்ளான்; சாணினு முளன்; ஓரணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்; மாமேருக் குன்றினு முளன்; தேர்தி' எனலும், ஹிரண்யன், 'யான் காட்டும் இத்தூணினு முளனோ?' என்றான். ப்ரஹ்லாதன், 'உளன்' என்னலுமே, அஸுரர்கோன் சீற்றம் மிகுந்து, மலைமேல் இடி விழுந்ததெனப் புடைத்தான் தூணை. புடைத்திடலும், செங்கட்சீயம் தூணத்தினின்றும் சிரித்திட, அதனால் அண்டம் பிளப்புண்டது; உம்பர் யாவரும் யுக முடிவு வந்துற்றதோ வென்ன ஐயுற்றனர். உயிர்கள் யாவும் சோர்ந்து வீழ்ந்தன. அப்போது

சிங்கப்பிரான் தூணினின்றும் தோன்றுதல்

"முச்சடையிட் டொளிர்முடியு முக்கணுத லும்சீய முகமும் தீக்கும்
கிச்சுபடு கேசமும்செங் கிளர்வடவை வழிவிழியும் கேடில் கோட்டத்
துச்சமுள்ள வெயிறுகளு முடன்மனித வடிவமுமா யிரந்தோட் குற்ற
மெச்சலுறும் படைக்குழுவு மிகவிளங்க வளையுகிர்கள் மிளிர்ந்துகாட்ட"

[ஸ்ரீ பாத். புரா- நலமடங்க லெழுந்த படலம்—393]

பரந்தாமன் வெளியடைந்தான். அவனை ப்ரஹ்லாதன் கண்குளிர நோக்கி ஆடினான், பாடினான், அச்சோ வென்றான்; விழி நீர் வாரக் கரங் குவித்து நின்று,

"என்னருள்கண் மணியிதுவோ என்னுயிரின் உயிரிதுவோ எனைவிடாது
துன்னிவரும் தோன்றாத துணையிதுவோ தோளாத முத்தோ பொன்னோ
மன்னியொளிர் மரகதமோ மாங்கனியோ தேங்கிவரும் மதுரவாறோ
கன்னல்முதிர்ந் திடுபாகோ கண்டோர்கள் உளம் வலிக்கும் காந்தமேயோ."

[ஸ்ரீ. பாத். புரா. நர. படலம்—395]

"நானுரைத்த மனுப்பொருளோ நாயடியேன் சொல்நிலையோ நளினத் தெந்தாய்
தானுரைத்த படியெழுந்த தற்பரமோ தனைக்காணத் தவித்து மாழ்கி
வானுரைக்க மண்ணுரைக்க வந்ததுவோ அந்தமில்லா வாழ்வோ வென்று
தானுரைத்தோர் கைம்மாறும் இலனென்றே உளநாணித் தவித்து நிற்பான்."

[ஸ்ரீ பாத். புரா. நர. படலம்—396]

இவ்வாறு நரசிங்கப்பிரானை நாத்தழும்பத் தொழுதேத்தி 'இப்போதேனும் என் தந்தை இவனடி பணிந் துய்வனோ?' என்று அவனை நோக்கித் தளர்ந்து

சோர்வான். அப்போதும் தன் தாளை வணங்காத் தகையனுன தானவனை நரகேஸரி, 'இவனன்றே நம் அடியாற்கு இடுக்கண் இழைத்தவன்!' எனச் சீறி, அகிலம் யாவும் விதிர்விதிர்க்கத் தன் பல்லாயிரம் கரங்களை நீட்டி அவனது சேனை வெள்ளத்தைத் தன்து படைக்கலங்கொண்டு பிசைந் தழிக்க, அதனைக் கண்டு இன்னலுற்ற இரண்யனைத் தன் தாள்மேல் கிடாத்தி, 'என்பால் பத்திக் காதல் கொண்ட என் அன்பன் பக்கல் இடுக்கண் இயற்றும் ஆற்றல் என்னே?' என நகைத்துச் சீறி தனது வச்சிர வக்ர உகிர்களால் அவன் உரத்தைக் கீறி, மற்றுமுள்ள குடர்களையும் கிழித்து, உத்தமனைப் பெற்ற உரவுத்தோ ளாதலின் அதனைத் தன் மார்பில் மாலையாக அணிந்துகொண்டான். அப்போது சீய உருக்கொண்ட அமலன்தன்னை அயன் அரன் அம்பரர் முனிவரர் முதலானோர் அடுத்து நோக்கும் ஆற்றல் அற்றவராய் இலக்குமி தேவியினிடம் சென்று அவளது மலரடி பணிந்து, 'தாயே! எங்கள் தந்தை இரணியன் கொடுமைக்கு ஆற்ருது சீற்றம் மிக்கிருக்கிருர்; யாம் அணுக வல்லோம் அல்லோம்; நீவிர் சென்று அவர் சின மாற்றியருள்க' என்று ஸ்ரீ ஸூக்தம் பாடித் துதித்தனர். வீறுதரும் விமலையும் அன்னுரிடம் அருள்கொண்டு, 'மக்காள்! நீவிர் வெருவல்மின், யான் செல்வல்' என்றருளி எம்பெருமானிடம் விரைந்து வந்தாள்.

சீதேவி சிங்கப்பெருமானிடம் எழுந்தருளுதல்

''தமதடியிற் சரண்புரிஞர் பீதிநீங்கத் தனதிருபாங் கரும்விமலை சுசீலையாதி
குமரியர்கள் புடைசூழ இடைநுடங்கக் குளிர்மதியில் வியர்பொடிப்பக்
குழைக ளாட
அமைவிழிகள் அருள்பொழியச் சிறுமுறுவல்செய் யரக்காம்பல் நிலவரும்ப
அணிவில் வீச
இமையவர்கள் தம்தாதை முன்னம் சென்றே பெருத்தமதைக் கோட்டி
நின்ருள் எம்பிராட்டி.'' 416.

மடங்கற் பிரான் மாலோல ஞதல்

''குமுதமல ரமுதரும்பிக் கொட்டன்மானக் குறுநகைகொண் டருகில்நின்ருள்
குளிரநோக்கி
எமதழகன் அமரர்பயம் இரியவேண்டி யிங்ஙனமுற் றனளருளை யியற்கை
யுற்ருள்
நமதருகின் இவளைபணைத் தில்லோ மென்னின் நமதடியார் அருகடையார் என்று
ளெண்ணி
அமலனகச் சினந்தணிந்து தனதுகையால் அரவிந்தை தனைத்தழுவிச் சாந்தியுற்ருன்.''
[ஸ்ரீபாத். புரா. நர. மட. எழு. படலம்—417]

இங்ஙனம் சீதேவியின் சேர்க்கையால் சினந் தணியப்பெற்ற சிங்கப் பிரானை ப்ரஹ்லாதன் முதலியோர் பல்வாறு துதித் துய்ந்தனர்.

பின்னர் ப்ரஹ்லாதனை மாலோலன் மனங்கனிந்து மலர்க்கண் நோக்கி, "என் அருமை இளங் குழந்தாய்! உன் தாதை சொன்னவண்ணம் செய்யாமல் என்னையே தனி முதல்வனாக வணங்கி வழிபட்டாய். நின் அருமைத் திரு மேனி நோவுபட்டாய். நெருப்பதனில் எரிப்புண்டாய். ஊணற்றாய். மலையி னின்றும் அசுரர் உருட்ட வீழ்ந்தாய். வாரிதியில் மூழ்கினாய்; கழுவேறினாய்; எனினும் என் அடியை மறவாத வலிமை பூண்டாய். நீ உற்ற இன்னல் களை உன்ன உன்ன என்னுளம் உருகுகின்றது. நாம் உள்ளளவும் எல்லா நல னும் துய்ப்பாய். இவ்வரசாட்சிச் செல்வத்தை ஏற்றுப் பல்காலம் இன்ப நுகர்ந்து பின் பெருவீடு பெறுவாய்" என்று திருவாய் மலர்ந்து அன்பனை அரியாஸனத் தேற்றி ஆசி கூறி அந்தர்த்தானமானான்.

பின்னர் ப்ரஹ்லாதன் மணம் புரிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உலகமாண்டு, கூர் விரத்தியுடன் வினையின் திரளுக் கஞ்சித் தவங்கிடந்து மறத் தை மாற்றி, திருமால்தன் திருவடியில் தலைவணங்கிப் பரமபத ஸுக ஜலதி படிந்து வாழ்ந்தான்.

கொ. ஸுதர்சநாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M. A., வித்வான், L. T., திருவையாறு.]

மதுரையின் மாட வீதிகளில் மன்னவன் நடந்தான். தான் அரண் மனையை அடையுமுன் ஒரு கவளமேனும் விழாவிடில் தன் வயிற்றுப் பசி தன்னைக் கொன்றுவிடு மென்று எண்ணினான். ஒரு பெரிய வீட்டிற்குள் புகுந் தான். வீட்டுக்காரனும் குழந்தைகளும் உண்டுகொண்டிருந்தனர். 'அம்மா! ஒரு கவளம் அந்த மிடுங்கள்' என்று கூவினான். வீட்டுக்காரி முக மலர்ச்சி யுடன் 'உட்கார்' என்றவுடன், பரதேசி செய்த அவமானத்தை மறந்த அரசன், 'நான் உங்களை ஆளும் அரசன்; பாண்டியன்; நாளை ஸம்மானம் செய்கிறேன்' என்றான். வீட்டுக்காரி, இவனைப் பேயோ பிசாசோ பைத்யக்காரனோ என்று நினைத்து நடுக்கத்தாற் கூச்சலிட, வீட்டு எஜமானன் 'இவன் பசித்தவ னல்லன், பைத்யக்காரன்' என்று எண்ணி விரட்டினான். ஓடினான் பரகேஸரி. அவன் ஹ்ருதயம் படபடத்தது. உடலம் நொந்தது. பொறுக்கொணாத தாபம் உண்டாயிற்று. பல வீதிகளைக் கடந்து பெரிய கோட்டை வாயிலில் வெளி அகழ் மதிளின் புறத்தே மயங்கி வீழ்ந்தான். உள்ளே அரண்மனையில் இனிய வாத்ய கோஷம். வெளியே ஒரு பெருநகரின் ஆரவாரம். சற்று நேரத்தில்

எழுந்தான். வானத்தை உற்று நோக்கினான். 'தண் மதியே! நிலா முற்றத்தில் பெருந்தேவியாருடன் வீற்றிருக்க, யவனப் பெண்டிர் பொன் தீவட்டி ஏந்த, சதிரிள மடவார் யாழ்கொண்டு இன்னிசை வெள்ள மெழுப்ப, அவ்வமுதத்திலே மூழ்கி உன்னைக் கடைக்கணிக்காத அப்பாண்டியனாகிய நான், இன்று நிராசையுடன் உன்னைப் பார்க்கிறேன். என்னைப்போல் நிர்க்கதியானவனை நீ கண்டிருக்க மாட்டாய். உன் கிரணங்களேனும் என்பால் குற்றங் காணாது என்னைக் குளிரச்செய்கின்றன. அந்தோ! இம்மதுரையில் என்னைக் கண்டறிந்தவனையே காணோமே. என்னைக் கண்டவர் பாதகத்தைக் காண்பது போல் விலகுகின்றனரே!' என்று வாய்விட்டுப் புலம்பினான். அவன் கண்களில் உஷ்ணமான நீர் வெள்ளம் சொரிந்தது. வலிய மதிட் சுவரின்மேல் சாய்ந்து வானை நோக்கிய வண்ணம் அண்ணாந்தான்.

“மாகமும் மண்ணும் மலையுங் கடலும் வையகம் ஈரேழும் ஆகமும் உயிரும் ஆகியே நின்றதோர் ஆதியே அற்புதமே!” என்னும் ஓர் இன்னிசை எழும்பியது. இசையைக் கேட்டான் இறைவன். பொங்கியது ஆத்ரம். 'மன்னருக்கு மேலா ஒரு கடவுள்? என்ன கற்பனை? என்ன கற்பனை?' என்று தன் பற்களைக் கடித்தான். அவ்வழியே சென்ற ஒரு வீரன் அவனைக் கண்டு, 'ஏ பேயா! இப் பெருவழியில் யாது செய்கின்றனை?' என்றான். அந்த யவன வீரனைக் கண்ட அரசன் வெகு ஆநந்தத்துடன் 'டயொனீஷஸ்! (Dionisyus) நீ தானா! உனக்கு என்னைத் தெரியவில்லையா? நான் உன் மன்னவ னல்லவா?' என்றான். டயொனீஷியஸ் சிரித்துக்கொண்டு 'இவன் யார்? பேயன்' என்று சொல்லி நகர்ந்தான். 'ஏ நன்றி கெட்டவனே! ரோமாபுரி அரசன் உன்னைப் புகழ்ந்தா னென்றல்லவா உன்னை வேலைக்கு அமர்த்திக்கொண்டேன். நீ வெகு கர்விஷ்டனாகி நடக்கின்றாயே!' என்றான். டயொனீஷியஸுடன் வந்த அவனது பணியாளனான ஹீராஸ், 'அடே பதரே! பாண்டியனாக நடிக்கும் பைத்யம் மிகவும் மெச்சத்தக்கது! அத்துடன் என் எஜமானனையன்றோ தொட்டு அவமதிக்கின்றாய்; சீ கழுதை' என்று தன் குறுந் தடியால் ஒரு தட்டுத் தட்டினான். மன்னவனது நெற்றியில் அவ்வடி படவும் மன்னவன் மயங்கி வீழ்ந்தான். சற்று நேரத்தில் எழுந்தான். பெருகும் உதிரத்தைத் துடைக்கத் துடைக்க அது மேலும் மேலும் பெருகியது. தலையில் வேதனை. வயிற்றில் பசி. உடலெல்லாம் தாபம். முன்போல் சுவரில் சாய்ந்தான். அவ்வழியே சென்றனள் தோட்டக்காரன் மனைவி செல்லம். அரசன், 'செல்லம்! செல்லம்!' என்று கூப்பிடவும் செல்லம் திரும்பினாள். கந்தை யாடையும் மாசுற்ற கோலமும் கொண்ட மன்னவனைக் கண்டாள். திடுக்கிட்டாள். 'என் பெயரை இச் சண்டாளன் எங்கே அறிந்தான்?' என நடுங்கினாள். 'செல்லம்! நீ மென்மொழிக் கண்ணுக்கு (ராணியார்) மாலை கொண்டு வருபவ ளல்லவா? என்னை—உன் மன்னவனை—அறியாயா?' என்றான். செல்லம் நடுங்கினாள். 'ப்ரஷ்டா! காவலர் காதில் இவ்வார்த்தைகள் படவில்லை. பட்டிருந்தால் உன்னை மன்னவன் என்று சொல்லிக்கொண்டதற்கும், ராணியாரின் பெயரைக் கூச்ச மின்றி

உச்சரித்த பாவத்திற்கும் நீ யமலோகம் போயிருப்பாய். உடலெல்லாம் ரத்தம். நீ ஒரு கொடிய கொலேகாரன் போலும்! ஓடு அப்பால்' என்ருள். மன்னவன், அவள் பெண்ணுகையால் இரங்குவா ளென்று தொடர்ந்து சென்று 'செல்லம்! செல்லம்!' என்று கூவினன். செல்லம் அவன் முகத்திற் காறி உமிழ்ந்து அப்பால் சென்ருள். ஒரு பெண் பிள்ளையால் பட்ட பரிபவத்தை நினைத்து மனம் வெதும்பிய மன்னனிடம் ஒரு காவலாளன் தோன்றினன். 'அடே துராசாரா! பெண் பிள்ளைகளைப் பாண்டி மன்னனது ஆட்சியில் காற்றும் தொடமுடியாது. நீ அவளைத் தொடர்ந்தது மன்றி ஆசைப் பெயரிட்டும் கூவுகிருயே!' என்று அதட்டினன். மன்னவன் கோபத்துடன் 'என் அந்நத்தை உண்டு என்னையே மிரட்டுகிருயே! நான் உன் மன்னவன் என்று அறியாயோ?' என்று கோபக் கனல் வீச உரைத்தான். பளீர் பளீர் என இரண்டு சவுக்கடிகள் மன்னவன் மீது வீழ்ந்தன. 'ஐயோ' என்றும் கூச்சலிட முடியாது மன்னவன் கீழே விழுந்தான். முகத்தில் ஒரு பெண் உமிழ்ந்த எச்சில் வரியாக நின்றது. மார்பிலும் கையிலும் அடிபட்ட இரத்தப் பெருக்கு. ஒளி வீசும் நிலவில் மன்னவன் மயங்கிக் கிடந்தான். வானில் தண்மதி தனிச் செங்கோல் செலுத்தினன். ஜனச் சந்தடி ஓய்ந்தது. ஜில்லென்ற காற்று வைகைக் கரையில் மலர்ந்த முல்லைகளின் புதுமணத்தை வாரி வீசியது. மன்னவன் எழுந்தான். கண்களில் நீர் ஆருகப் பெருகியது. "ஓ உலகெலாம் ஆளும் சக்தியே! ஏ தனிவித்தே! நீ வெற்றி பெற்ருய்; பாண்டியன் பதர்; பாரெல்லாம் பதர்; இமையோர் உலகும் பதர்; உன் முன்னர் ஒன்றுஞ் செல்லாது. நீயே விதை; நீயே பயிர்; நீயே உயிர்; நீயே பயன்; நீயே சுவை; நீயே இறை; வாழ்க நின் நாமம். வேதப் பெரு வாழ்வே! விண்ணவர் தனி முதலே! நானென்னும் இப்பெரும் சுமையை உன் பாதாரவிந்தத்தில் விடுத்தேன். என்னை ஆண்டருள். நான் பாவி; நான் பதர். நீயே தந்தை; நீயே தாய்; நீயே எல்லாம்" என்று வாய்பதறினன். உளறினன். அவன் உள்ளத்தே ஓர் இன்ப ஊற்று எழுந்தது. அவன் கண்களில் நீர் அருவி பெருகியது. 'மன்னவா! என் அரசே! என் வாழ்வே! உன்னை மறந்து மாழாந்து போனேனே! வானவர் தனிபரசே! வையகத் திறைவா! என் இறைவா! யானேர் ஏழை' எனக் கூவினன். முகன் முதலாகத் தன் வாழ்வில் கரங்களைக் குவித்து அஞ்ஜலி செய்தான். "சேதநாசேதநங்கள் உடலின்றி மூலத்திலே ஒட்டி அமுங்குங்கால் பெருந்தயை புரிந்து இவ்வாக்கத்துடன் அவற்றைப் புணர்த்திய அமலா! ஆதியே! அமுதே! அன்பின் கடலே! அருட்பெரு நிதியே! அமலர்தம் ஆருயிரே! இன்று பட்டேன் ஒரு கோடி! என் பாவ உடல் வீய்ந்து மடியுமுன் என் உயிரை உன் திவ்ய கருணையால் கைக்கொள். மன்னவனும் மண்ணே. என் தெய்வமே! என்ன பாவம் செய்தேன்! இப்படி அநாதையாய் ஆத்மாபஹாரம் செய்த என்னை எங்ஙனம் இம்மண் தாங்குவதோ? இவ்விண் பார்ப்பதோ? இடி விழாது விடுத்ததோ?' உன் கடைக் கண்ணும் அமுத மீந்து என்னை ஆள்வாயாக. மண்ணவர்க்கென எண்ணிறந்த கோயில் குடிகொண்ட மாதவனே! என் மதுரைக் காவலனே!" என அவன் தேம்பித் தேம்பி அழுதான். ஓர் இன்னிசை மறுபடியும் கேட்டது.

" அங்கண்மா ஞாலத் தரசரபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ
திங்களு மாதித்தியனு மெழுந்தாற் போல்
அங்க ணிரண்டும்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய் "

மன்னவன் காதில் இவ்விசையொலி அமுதென விழுந்தது. கைகளைக் குவித்த வண்ணம் கேட்டான். மறுபடியும்

" கார்கெழு கடல்களும் மலைகளுமாய்
ஏர்களு முலகமு மாகிமுத
லார்களு மறிவரு நிலையினையாய்ச்
சீர்கெழு நான்மறை யானவனே !

'ஆண்டா யுனைக்காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே "

என்றோர் இன்னிசை கேட்டது. வான வீதியில் பல்லாயிரவர் உயிரைக் கொள்ளை கொள்ளும் இனிமையுடன் பாடியதுபோல் தோன்றிற்று.

[தொடரும்]

ஸ்ரீ:
ஸ்ரீமதே முக்தி நரஸிம்ஹ ஸ்வாமி பரப்ரஹ்மணே நம:

நமது ஆசாரங்களும் அநுஷ்டாநங்களும்

[திருமண் காப்பு விஷயம்]

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் B. A., மேல்மாம்பலம்]

கடிகாரம் மணி ஒன்பதரை அடித்தது. உடனே ரங்கன் புழக்கடையில் இரண்டு செப்பு ஜலத்தைத் தூக்கிக் கொட்டிக்கொண்டு குளித்துவிட்டு, மடி வேஷ்டியை இடுப்பில் சுற்றிக்கொண்டு பரக்கப் பரக்கத் திருமடைப்பள்ளிக்கு ஓடிவந்து, 'பத்து மணிக்குப் பள்ளிக்கூடம்; சாப்பிட்டுவிட்டுச் சட்டைகளை மாட்டிக்கொண்டு இன்னும் கால் மணிக்குள் பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேரவேண்டும்; சேராவிட்டால் முதல் 'பீரியட்' கணக்கு உபாத்தியாயர் நிர்த்தாக்ஷிண்யமாகப் பெஞ்சுமேலே நிறுத்தி வைத்துவிடுவார்' என்றான்.

திருமடைப்பள்ளிக்கு ஓடிவந்த ரங்கன், அங்கே நின்றுகொண்டிருந்த தாத்தாவைப் பார்த்தவுடன் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். ஏனென்றால்: அவன் நெற்றிக்குத் திருமண் இட்டுக்கொள்ளவில்லை; மாத்யாஹ்நிக

மும் பண்ணவில்லை. அப்படியே உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டுப் போக அவர் விடமாட்டார். அவன் நினைத்தபடியே அவரும் கேட்டுவிட்டார்· 'என்னடா பயலே! நெற்றிக்குக்கூட இட்டுக்கொள்ளாமல் அவ்வளவு அவஸரம்? ஓடிப் போய் நெற்றிக்கு இட்டுக்கொண்டு மாத்யாந்ஹிகம் பண்ணிவிட்டு வாடா' என்றார்.

ரங்கனுக்குத் தாத்தா செல்லம் உண்டு. அவருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அவரோடு நாள் முழுவதும் கொஞ்சுவான். அவரைக் கதைகள் சொல்லச் சொல்லிக் கேட்பான். அவர் பரிஹாஸங்களை யெல்லாம் கேட்டுவிட்டுச் சிரிப்பான். தானும் பரிஹாஸமாக ஏதாவது சொல்வான். ஆனால் நெற்றிக்கு இட்டுக் கொள்வது, ஸந்த்யாவந்தனம் பண்ணுவது, ஸஹஸ்ர நாமம் சொல்வது முதலிய விஷயங்களில் தாத்தா மிகவும் கண்டிப்பு. அவனும் தாத்தாவினிடம் எதிர்த்துப் பேசுவது கிடையாது. எனவே நெற்றிக்கு இட்டுக் கொண்டு மாத்யாந்ஹிகத்தைப் பண்ணிவிட்டு, உள்ளே போய்ப் பெருமாள் ஸந்நிதியில் ஸேவித்து விட்டு அப்புறம் சாப்பிட வந்தான். சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போகும்போது நேரந்தான் ஆகிவிட்டது. ஆனால் அவன் அத்ருஷ்டம் அன்று கணக்கு உபாத்யாயர் 'லேட்'டாக வந்தார். ஆதலால் அவன் பெஞ்சுமேல் ஏறாமல் தப்பினான்.

ஸாயங்காலம் வீட்டுக்கு வந்தவுடன் தீட்டு வேஷ்டிகளையும் சட்டைகளையும் அவிழ்த்துக் கொடியில் போட்டுவிட்டு, வேறு மடி வேஷ்டியைக் கட்டிக்கொண்டு ரங்கன் தாத்தா இருக்கு மிடத்துக்கு ஓடினான். தாத்தா ரங்கனை அணைத்துக்கொண்டார். அவருக்கு ரங்கனிடம் ஒரு அலாதி அன்பு இருந்தது. ஏனென்றால்: அவனுக்கு வயஸ் பன்னிரண்டுதான் ஆயிற்றென்றாலும், அவனிடம் அந்த வயஸுக்கு மேற்பட்ட புத்திசாலித்தனமும் ஸாமர்த்யமும் இருந்தன. எல்லாரும் அவனை 'சமர்தது' என்பார்கள். அதனால் அவனுக்குத் துளிக்கூட கர்வம் கிடையாது. சில அஸத்துக்கள் மாதிரி பெரியவர்களிடம் எதிர்த்துப் பேசமாட்டான். எல்லாவற்றையுங் காட்டில் ஆசார அநுஷ்டானங்களை விடாமல் வைதிகமாக இருக்கும் பெரியவர்களிடம் அவனுக்கு மட்டு மரியாதை உண்டு.

ஒரு ஸமயம் அவனுடைய ஸ்நேஹிதர்கள் அவனைத் தலையில் 'க்ராப்' வைத்துக் கொள்ளச் சொன்னார்கள். அவனுக்குத் தலையில் கட்டு மயிர் இருந்தது. க்ராப் வைத்துக்கொள்வதில் அவனுக்கு இஷ்டம்தான்; என்றாலும் அடர்ந்து நீண்டு தொங்கிய ஒரு கட்டு மயிரை வெட்டிக் கொட்டிவிடுவதற்கு அவனுக்கு மனம் வரவில்லை. 'அப்பா அம்மாவைக் கேட்போம்' என்று நினைத்தான்; பிறகு 'தாத்தாவைக் கேட்போம்; அவர் ஸம்மதித்தால் அப்புறம் அப்பா ஒன்றும் சொல்லமாட்டார்' என்று நினைத்து நேரே தாத்தாவிடம் போய் அவரை யோசனை கேட்டான். மிகவும் பக்குவமாக விஷயத்தைத் தாத்தாவிடம் சொன்னான். அதைக் கேட்டதும் தாத்தா 'களுக்' கென்று சிரித்துவிட்டார்.

'பேஷாகப் பண்ணிக்கோயேண்டா! உன் குடுமி உன் கிட்டே கிடந்து திண்டாடுகிறது. அதை வெட்டுகிறதற்கு என்னை என்ன கேள்வி?' என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார்.

'போங்கோ பரிஹாஸம் பண்ணுதங்கோ தாத்தா. நிஜமாகத்தான் கேட்கிறேன். எங்கள் க்ளாஸ் பையன்கள் அவ்வளவு பேரும் தலையில் க்ராப் தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒருவன்தான் தலையில் மயிர் வைத்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் என்னைப் பார்க்கும்போது எனக்கே வெட்கமாக இருக்கிறது தாத்தா' என்றான் பேரன்.

'வெட்கமாவது அவமானமாவதடா! செய்யக் கூடாத காரியங்களைச் செய்துவிட்டால் வெட்கப்படவேணும். ஏதாவது பொய் சொல்லிவிட்டால் அல்லது திருடிவிட்டால் வெட்கப்படவேண்டியதுதான். அப்போது நம்முடைய மனச்சாட்சியே நாம் பண்ணியது தப்பு என்று சொல்லும். நம்முடைய குற்றத்தைத் தெரிந்துகொண்டு மற்றப் பையன்கள் பரிஹாஸமாக நம்மைப் பார்க்கும்போது நமக்கு அவமானம் தாங்கமுடியாது. அழக்கூடத் தோன்றும். அப்படியில்லாமல், அந்த வெட்கங்கெட்ட பையன்கள் ஸ்வய புத்தியில்லாமல் ஒரு ஆட்டைப் பார்த்து இன்னொரு ஆடு ஓடுவதுபோல், நல்லது கெட்டது எல்லாவற்றிலும் பிறத்தியாரைப் பார்த்துக் 'காபி' அடித்தால், அவர்களைப் பார்த்து நாம் 'காபி' அடிப்பது நமக்கே அவமானம் இல்லையா? உனக்கு ஸ்வய புத்தி இருக்கிறது. நல்லது கெட்டது என்னவென்று தெரியும். நீயாக யோசனை செய்து பார். தலையில் மயிர் வைத்து அழகாக முடிந்துகொள் வதைக் காட்டிலும் தலையைச் சிரைத்துக் கொட்டிவிடுவதுதான் அழகென்று தோன்றினால் உடனே ஓடிப்போய்த் தலையை வெட்டிவிடு' என்றார் தாத்தா.

'நீங்கள் சொல்லுகிறது அத்தனையும் கேட்டுக்கொண்டேன் தாத்தா. ஆனால் ஒரு விஷயத்தை நீங்கள் விட்டுவிட்டீர்கள். நாமெல்லாம் ஊரோடு ஒத்து வாழவேண்டாமா? எல்லாரும் எப்படி இருக்கிறார்களோ அப்படி நாமும் இருக்கவேண்டாமா?' என்று கெஞ்சினான் பேரன்.

'போடா முட்டாள். ஊரோடு ஒத்து வாழ்கிறது என்றால் என்ன? ஊர் என்பதற்கு, 'ஊரில் உள்ள பெரியவர்கள்' என்று அர்த்தம். ஊரில் உள்ள கழிசடைகளைச் சொல்லவில்லை. நல்லது கெட்டது தெரிந்த விவேகிகளைப் பார்த்து அவர்களைப்போல் நீயும் நடந்துகொள்ளவேணும். கொஞ்ச நாளுக்கு முன்னால் நம்முடைய கவர்னர் ஜெனரல் ராஜாஜி பேசின வார்த்தைகளைப் பேப்பரில் வாசித்தாயா? 'பிறத்தியார் நம்மைப் பார்த்துப் பரிஹாஸம் பண்ணுவார்களோ அல்லது தூஷிப்பார்களோ என்று பயந்து நாம் ஒரு காரியமும் செய்யக்கூடாது. நாமே யோசித்து எது சரி என்று தோன்றுகிறதோ அதைத்தான் செய்யவேண்டும். அதுவும் ஜாதி மத விஷயங்களில் அயலார் செய்யும் பரிஹாஸத்தையும் தூஷணையையும் லக்ஷ்யமே செய்யக்கூடாது' என்று அவர் சொல்லியிருக்கிறார். ஜாதி என்றால் ஜாதிக்கு ஏற்ற ஆசாரமும்

சேர்ந்ததுதான். 'நானும் ப்ராம்ஹணன்' என்று சொல்லிக்கொண்டு ப்ராம்ஹண ஜாதிக்கு அவச்யமான பூணூலையும் குடுமியையும் எடுத்துவிட முடியுமா?' என்றார் தாத்தா.

இந்த மாதிரி ரங்கன் தாத்தாவோடு தர்க்கம் பண்ணுவதும், அவர் மூலமாகப் பெரியவர்களுடைய ஆசார அநுஷ்டாநங்களைப்பற்றி அவன் தெரிந்துகொள்வதும் வழக்கம். இப்படித் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறான் என்றுதான் தாத்தாவுக்கு ரங்கனிடம் மிகுந்த அன்பு. அன்று தாத்தாவிடம் ஓடி வந்து அவர் மடியிலே செல்வமாக உட்கார்ந்துகொண்ட ரங்கன், 'இன்னிக்கு ஏதாவது நல்ல கதை சொல்லுங்கோ தாத்தா' என்று கேட்டான். 'எனக்கு ரொம்ப அலுப்பாக இருக்கிறது. நாளைக்குக் கதை சொல்லுகிறேன். இன்றைக்கு நீ போய் விளையாடு' என்றார் தாத்தா. 'இன்றைக்கு உங்களை ஒரு ஸந்தேஹம் கேட்கவேணும் என்று நினைத்துக்கொண்டே இருந்தேன்; வந்தவுடன் மறந்துபோய்விட்டேன்' என்றான் பேரன்.

'என்னடா உன்னுடைய பெரிய ஸந்தேஹம்?' என்றார் தாத்தா சிரித்துக்கொண்டு. 'என்னைப் பரிஹாஸம் பண்ணுவது இருக்கட்டும் தாத்தா. இன்னிக்குக் காலமே நெற்றிக்குத் திருமண் இட்டுக்கொள்ளாமல் வந்துவிட்டேன் என்று கோபித்துக்கொண்டேளே. திருமண் என்னத்துக்காக இட்டுக்கவேணும், சொல்லுங்கோ' என்றான் ரங்கன்.

'ரொம்பப் பெரிய ஸந்தேஹந்தாண்டா! நாமெல்லாரும் வைஷ்ணவர்கள் இல்லையா? வைஷ்ணவர்களுக்கு நெற்றியிலே திருமண் ஸ்ரீசூர்ணம் இட்டுக்கொள்ளவேணும். இதை இட்டுக்கொள்ளவேணும் என்று சாஸ்த்ரங்களிலே சொல்லியிருக்கிறது. நம்முடைய பெரியவர்கள் எல்லாரும் இதை இட்டுக்கொண்டிருந்தார்கள். அதனாலேதான் அதை நாமும் இட்டுக்கொள்ள வேண்டும்' என்றார் தாத்தா.

"நான் வாசிக்கிற மிஷன் பள்ளிக்கூடத்திலே டேனியல் என்று ஒரு உபாத்தியாயர் இருக்கிறார் தாத்தா. தினம் எங்களுக்குப் பைபிள் க்ளாஸ் அவர்தான் நடத்துகிறார். பைபிள் க்ளாஸ் என்று பேரேயொழிய, முக்கால் பீரியட் வரையில் ஹிந்துக்களின் ஆசாரங்களையெல்லாம் பரிஹாஸம் பண்ணிக்கொண்டேயிருப்பார். தலையில் குடுமி வைத்துக்கொள்வது, நெற்றிக்கு இட்டுக்கொள்வது, கோவிலுக்குப்போய்ப் பெருமாள் ஸேவிப்பது முதலிய எல்லாம் மூட வழக்கங்கள் என்றும் மூட நம்பிக்கைகள் என்றும் பரிஹாஸம் பண்ணுகிறார். அவர் வேடிக்கை வேடிக்கையாக ஏதாவது சொல்லிப் பரிஹாஸம் பண்ணும்போது நம்முடைய அக்ரஹாரத்துப் பையன்கள் எல்லாம் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். எனக்கு மாத்திரம் உபாத்யாயர் பரிஹாஸத்தைக்காட்டிலும் அக்ரஹாரத்துப் பையன்கள் இதைக் கேட்டுவிட்டுச் சிரிப்பதுதான் ரொம்பவும் அவமானமாக இருக்கிறது. ஒருநாள் பாருங்கோ தாத்தா! நான் முன் பெஞ்சிலே உட்கார்ந்துகொண்டிருந்தேன். நெற்றியிலே பளிச்சென்று திருமண் இட்டுக்

கொண்டிருந்தேன். என்னைப் பார்த்துவிட்டு அந்த உபாத்யாயர் 'மூணு கொம்பு மனுஷன்' என்றார். உடனே எல்லாப் பையன்களும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். எனக்கா கோபம் கோபமாகவந்தது. 'நான் சொன்னது தப்பாடா! நீ நெற்றியிலே வெள்ளை நாமமும் சிவப்பு நாமமும் போட்டுக்கொள்கிறாயே! அது என்னத்தைக் காட்டுகிறது? நீ மூட நம்பிக்கையினால்தானே அதைப் போட்டுக்கொள்ளுகிறாய்?' என்றார் அவர் என்னைப் பார்த்து. "மூட நம்பிக்கைகள் எல்லா மதத்திலும்தான் ஸார் இருக்கிறது; அதற்காக அந்யாயமாக ஒரு மதத்தை தூஷிக்கக்கூடாது ஸார்' என்று நான் சொன்னபிறகு அவர் வேறு விஷயங்களுக்குப் போய்விட்டார். அப்பொழுதே பிடித்து உங்களைக் கேட்கவேணும் என்று நினைத்துக்கொண்டேயிருந்தேன். இப்பொழுது நீங்கள், 'எங்கள் பெரியவர்கள் போட்டுக்கொண்டிருந்தார்கள்; அதனால் நானும் போட்டுக்கொள்ளுகிறேன்' என்று சொல்லி அந்த உபாத்தியாயர் சொல்லியதற்கு முத்தாய்ப்பு வைக்கிறீர்களே!' என்றான் ரங்கன்.

ரங்கன் ஆவேசம் வந்தவனைப்போல் பேசினான். 'நம்முடைய மதத்தையும் ஆசாரங்களையும் வேறொருவன் தூஷிக்கிறதாவது? தூஷித்துப் பேச அவனுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?' என்று அவன் மனம் குமுறியது. அவன் வார்த்தைகளைக் கேட்ட தாத்தாவுக்கும் நெஞ்சில் சுருக்கென்றது. அவர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

'நம் வீட்டுக் குழந்தைகளுக்கு நம்முடைய மதம் ஸம்ப்ரதாயம் முதலியவற்றைப்பற்றி நாம் ஒன்றுமே கற்றுக்கொடுக்கிறதில்லை. அவர்களைக் கிறிஸ்தவ மிஷன் பள்ளிக்கூடங்களுக்கு வேறு அனுப்புகிறோம். மிஷனரிகள் தங்களுடைய மதங்களை ப்ரசாரம் பண்ண வந்தவர்கள் தானே! இளங் குழந்தைகள் நெஞ்சில், கிறிஸ்தவ மதம்தான் உலகத்திலேயே மிகவும் உயர்ந்த மதம் என்றும், நம்முடைய ஸநாதந ஹிந்து மதம் மூட நப்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் நிறைந்தது என்றும் நன்றாகப் பதியும்படி அவர்கள் போதித்துவிடுகிறார்கள். பசுமரத்தில் ஆணி அடித்ததுபோல் இள நெஞ்சில் நன்றாகப் பதிந்த எண்ணம் பின்னால் எப்போதாவது மாறுமோ? ஒருநாளும் மாறவே மாறாது. நம்முடைய இளங்குழந்தைகளுக்கு நாம் செய்கிறது தீமை யல்லவா? தீமையும் ஸாதாரணமானதா? அவர்கள் ஆத்மாவை யல்லவா நாசம் பண்ணுவதற்கு நாம் உடந்தையாக இருக்கிறோம். இப்படிப்பட்ட தீங்குகளைச் செய்யும் நமக்கு ஏதாவது ப்ராயச்சித்தம் உண்டா? கிடையவே கிடையாது.' இத்தகைய எண்ணங்கள் அவர் நெஞ்சில் ஓடின. அவர் உணர்ச்சியின் வசப்பட்டபடியால் சிறிது நேரம் மெய்ம்மறந்து இருந்தார். கலங்கியிருந்த அவர் கண்களிலிருந்து ஒன்று இரண்டு பொட்டுகள் ஜலம் வந்தது. பிறகு கண்களைத் துடைத்துக்கொண்டார்.

'என்ன தாத்தா சொல்லுங்கோளேன்' என்று பேரன் மறுபடியும் கேட்டபோதுதான் அவருடைய சிந்தனை கலைந்தது. பேரனுடைய கேள்விக்

189253

குப் பதில் சொல்லக்கூடிய நிலைமை வருவதற்குச் சில நிமிஷங்கள் பிடித்தன். பிறகு அவர் கூறினார்:—

"கிறிஸ்தவ மிஷனரிகள் தங்கள் மதத்தை ப்ரசாரம் பண்ணுவதற்குத் தானே இந்தத் தேசத்துக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் ஏழை ஜனங்களுக்கு இலவசமாக மருந்துகள் கொடுத்து வைத்யம் பண்ண ஆஸ்பத்ரிகள் வைக்கிறார்கள். குழந்தைகளுக்குப் பாடங்கள் கற்றுக்கொடுக்கப் பள்ளிக்கூடங்கள் வைக்கிறார்கள். இந்த ஆஸ்பத்ரிகளாலும் பள்ளிக்கூடங்களாலும் அவர்களுக்கு ஏற்படும் செலவுகள் கொஞ்சமாக இருக்குமா? இத்தனை செலவையும் எத்தனையோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் மிஷனரி ஸொஸைடிகள் கொடுக்கின்றன. கேவலம் பரோபகாரத்துக்காகத் தங்கள் தேசத்தில் பணம் திரட்டி, அயலூரில் செலவு செய்ய யாராவது முன்வருவார்களா? ஆகையால் இந்த உபகார சிந்தைக்கடியில் ஏதோவொரு ஆசை மறைந்து கிடக்கிறது. அதுதான் தங்கள் மதத்தை உலகம் முழுவதும் பரப்பவேணும் என்கிற ஆசை. சிறு குழந்தைகளின் உணர்ச்சியைப் பயன்படுத்தி அவர்கள் மனத்தில் தங்கள் மதத்தின் அடிப்படைகளைப் போதிப்பதைக் காட்டிலும் உயர்ந்த ப்ரசாரம் இருக்கமுடியுமா? இன்று பத்து வயதுக் குழந்தையாக இருக்கிறவர்கள் தானே இன்னும் பத்து வருஷங்களில் இந்தத் தேசத்தின் மக்களாக இருந்து, அதனுடைய நன்மை தீமைகளுக்குப் பொறுப்பாளிகளாக இருக்கப்போகிறார்கள். இப்போது அவர்கள் மனத்தில் கிறிஸ்தவ மதத்தின் விதைகளை விதைத்துவிட்டால், சரியான காலத்தில் அதுவே பலனைக் கொடுத்துவிடுகிறது. பள்ளிக்கூடத்துக்கு வரும் உன்னைப்போன்ற இளங் குழந்தைகள் நெஞ்சில், உங்கள் பெரியவர்கள் அநுஷ்டித்துவரும் மதம் ஆசாரம் இவற்றைப் பரிஹாஸம் பண்ணினால் தன்னாலே உங்களுக்கு அவற்றில் வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது. பிறகு உங்களை மதம் மாற்றுவதற்கு எங்கே சிரமம் ஏற்படப்போகிறது? இப்போது தான் என்ன? உன்னோடு வாசிக்கிற பையன்களில் படிக்குப் பாதிக்கு மேல் பெயருக்கு மாத்ரம் ஹிந்துப் பையன்களாக இருக்கிறார்களேயொழிய, அவர்கள் உண்மையில் கிறிஸ்தவ மதத்தில்தான் பற்று உள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் அநேக நாட்களாகவேதான் நடந்து வருகின்றன. ஆனால் நம்மவர்கள் இதற்குப் பரிஹாரம் பண்ணவே இல்லை" என்றார்.

தாத்தா உணர்ச்சியின் வேகத்தில் பேசிக்கொண்டே போனார். தாம் சொல்வது தம் பேரனுக்குப் புரியுமா புரியாதா என்றுகூட அவர் யோசிக்கவில்லை. பேரன் கெட்டிக்காரன் ஆனதால் சில விஷயங்களைப் புரிந்துகொண்டான். ஆனால் தான் கேட்ட ஸந்தேஹத்துக்குத் தாத்தா இன்னும் பதில் சொல்லவில்லையாகையால் மறுபடியும் கேட்டான்.

'நாம் நெற்றிக்குச் சிவப்புக் கோடும் வெளுப்புக் கோடுமாகத் திருமண் காப்பு இட்டுக்கொள்ளுகிறதை அந்த உபாத்யாயர் ஒரு மூட வழக்கம் என்

ரூர். அவர் சொல்லுகிறது சரியா இல்லையா என்று சொல்லுங்கோ தாத்தா' என்றான்.

'அவர் கிடக்கிறாரடா ராஜா! நெற்றிக்கு இட்டுக்கொள்ளுகிற திருமண் காப்பைப்பற்றி எல்லா விஷயங்களும் உனக்கு நான் சொல்லுகிறேன். கேட்டுக்கொள்ளடா கண்ணே!' என்று ஆரம்பித்தார் தாத்தா. இதற்கிடையில் ரங்கனை விளையாடுவதற்குக் கூப்பிட வந்த மற்ற அக்ரஹாரத்துப் பையன்களும் ரங்கனுக்குத் தாத்தா சொல்லுகிற விஷயங்களைத் தாங்களும் கேட்க விரும்பி எல்லோரும் தாத்தாவைச் சுற்றி உட்கார்ந்துகொண்டார்கள். தாத்தா கனைத்துக்கொண்டு ஆரம்பித்தார். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே வகுளாபரண மஹாமுநயே நம:

மாறன் மகிழ்ந்த மாக்கவி

[ஸ்ரீ. உப. ப. ரே. திருமலை ஐயங்கார், திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி.]

"பாடுவ தெல்லாம் பராங்குசனை நெஞ்சத்தாற்
றேடுவதெல் லாம்புளிக்கீழ்த் தேசிகனை—ஓடிப்போய்க்
காண்பதெலா நங்கையிரு கண்மணியை யான்விரும்பிப்
பூண்பதெலா மாறனடிப் போது.

[பெருந்தொகை 1823]

பூ மன்னு மாது பொருந்திய மார்பன் வண்புகழ் நாராயணன். அகார வாச்யன் அவனே. அவனே உயர்வற வுயர் நலம் உடையவன். அவாவறச் சூழ் அரியை அயனை அரனை அலற்றி அவாவற்று வீடு பெற்றவன் குருகூர்ச் சடகோபன். அம்மாறன் சொன்ன அவாவிலந்தாதி ஆயிரமே திருவாய்மொழி. இச்செந்தமிழ் வேதம் தரிக்கும் பேராத வுள்ளம் பெறுபவரே அடியார்க்கு நல்லார். வீசுபுகழ் மாறன் மலரடியே மன்னுயிர்க் கெல்லாம் ஆறு. மாலுகந்த வாசிரியரில் தலைசிறந்தவரே நம்மாழ்வார் என்பது தூப்புல் மாபுருடன் தூமொழி. மெய்யலது விளம்பாத சடகோபன் தன்னேரிலாத தனது தமிழ் மாலை ஆயிரத்துள் ஒரு மாக்கவியை மகிழ்ந்து உரைத்தனன் என்றால் அதனை அறிவது அறிஞர் கடனே. அதனைச் சற்று விளக்க முயல்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கு. பேரறிவாளர் குணமே கொள்வாராக.

அருச்சுனன் பரந்தாமனாகிய கண்ணபிரானுடன் நிகழ்த்திய கயிலாய யாத்திரையிடையில் கண்ணன் அடியி லிட்ட பூ சிவபிரான் முடியி லுற்றது என்பது ஒரு வரலாறு. இதனை வில்லிபுத்தூராழ்வார் தாம் இயற்றிய மகா பாரதத்தில் துரோணபருவம் பதின்மூன்றாம் போர்ச் சருக்கத்துள்ள பாடல்களில் நன்கு விரித்துள்ளார்.

இக்கதையைச் சற்று மாற்றி உரைப்பதும் காண்கின்றோம். அதாவது: அருச்சுனன் கண்ணனைச் சிவனாகப் பாவித்து அவன் முடிமேல் அருச்சித்த பூக்கள் சிவபிரானைத் தரிசித்தபோது அவன் அடியிற் காணப்பட்டன என்பது. 'இவ்வாறு கூறியது யார்? எங்கே?' என்பவற்றைக் காட்டுவாம்.

சேரர் பாண்டியர் சோழர் என்னும் முடியுடைத் தமிழ் வேந்தர் மூவரையும் அறம் பொருள் இன்பம் பற்றிப் புகழ்ந்துள்ள ஈராயிரத்து எழுநூறு (2700) வெண்பாக்களான் ஆயதோர் மிக வரிய பண்டைத் தமிழ்நூல் ஒன்று உளது. அது 'முத்தொள்ளாயிரம்' எனப் பெயர் பெறும். மூவேந்தரையும் தனித் தனியே சிறப்பித்து வரும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் பாடல்களாக மூன்று தொள்ளாயிரம் உடைமையின் அது அச்சிறப்புப் பெயர்பெற்றுச் சிறந்து விளங்குகின்றது என்ப. அது அம்முடியுடை வேந்தர்க்கு ஏற்ற பெற்றியான நாடு, நகர், திறை, தானை, யானை, பரி அமர்க்களம், வென்றி, புகழ், கொடை, இன்பம் என்பன முதலிய பல பல வகைகளாப் படைத்துக்கொண்டு புகழ்ந்த தாம் எனத் தோற்றுகின்றது. இப்பழ நூல் இந்நன்னாட்டுத் தமிழ்க் குடிகளும் தமிழ் அரசர்களுமே நிலவிய மிக மிகப் பழைய காலத்தே இயற்றப்பட்டது. ஆதலின், இதனால் அத்தொன்மைக் கால இயல்புகள் பல நன்கு அறியலாகும். இவ்வாறிருந்தும் இந்நூல் முழுதும் ஒரு சேரக் காண்பது இக்காலத்து அரிதாயிற்று. என்னே நம்மவர் நூல் போற்றும் பண்பு! இந்நூலாசிரியர் பெயர் முதலியன ஒன்றும் இப்போது அறியலாவது இல்லை. ஆங்காக்குக் கிடந்த பாடல்களைத் திரட்டி 'முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்' (108) [செந்தமிழ்ப் பிரசுரம்—14] என்ற தலைப்பில் சிறு நூலாக ஸேது ஸமஸ்தான வித்துவான் ஸ்ரீ. ரா. இராகவய்யங்கார் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் 'புகழ்' என்ற பகுதியில் முப்பத்தைந்தாவது பாடலாகப் பின்வரும்

"செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றால்—லெங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாற
னடிமிசையே காணப் படும்."

[செங்கண் நெடியான்—புண்டரீகாக்ஷனாய்த் திரிவிக்கிரமாவதாரம் செய்த திருமால்; விசயன்—அருச்சுனன்; வெள்ளேற்றான்—சிவபெருமான்; மாறன்—பாண்டியன். 'செங்க ணெடியான்மேல்' 'ஏற்றான்பால்' என்றாராயினும், உவமைக்கு ஏற்ப நெடியான் முடி என்றும் ஏற்றான் அடி என்றும் கொள்க.] என்ற பாடல் காணப்பெறுகின்றது.

பார்த்தன் கண்ணன் முடிமேல் அருச்சித்த பூக்கள் சிவபிரான் அடியிற் காணப்பட்டன என்பது இப்பாடலின் முன் இரண்டு அடியின் பொருள். இதனை நம்மாழ்வார் விளக்கும் முறையை இனிக் காண்பாம்.

"தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமம்
சேர்த்தி யவையே சிவன் முடிமேல் தான் கண்டு

பார்த்தன் தெளிந்தொழுந்த பைந்துழாயான் பெருமை
பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே''

என்பது திருவாய்மொழி. ''யாவ னொருவனுடைய பாதோதகத்தை சிரஸா வஹிக்கையாலே ருத்ரன் பரிசுத்தனானன்; யாவனொருவன் திருவடிகளிலே சாத்தின பூந்தாமம் ருத்ரன் தலையிலே காணப்பட்டது; அங்ஙனே யிருந்த பைந்துழாயான் பெருமை ஸுப்ரஸித்த மன்றோ? சொல்லவேணுமோ? என்கிறார்.'' என்பது ஆறாயிரப்படி வியாக்கியானம்.

இத்திருவாய்மொழிப் பாசுரத்தின் ஈற்றடியான 'பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே' என்பது மேன்மேலும் நன்கு ஆராய்தற்கு உரியது. கண்ணன் அடியில் இட்ட பூ சிவபிரான் முடியில் உற்றது என்ற பைந்துழாயான் பெருமையைக் கூறும் இக்கதை பிறர் ஒருவரால் மாறாகக் கூறப்பட்டது என்று ஆழ்வார் பாசுர மிடுகிறார் என்று பொருள் கொள்ளின் அது இழுக்காகாது. இங்ஙனம் மாறாகப் (பேர்த்தும்) பேசியவர் யார் என்று குறிக்க, அவரை 'ஒருவர்' என்று மகிழ்ந்து கூறினார் மாறன் என்பது சொல்லாமலே விளங்கும். இப்பாசுரத்துள்ள 'ஒருவர்' முத்தொள்ளாயிர வாசிரியரே. இவரே மாறன் மகிழ்ந்த மாக்கவி. பண்டைத் தமிழாசிரியரை நம்மாழ்வார் போற்றும் பெற்றியே பெற்றி. 'செங்க ணெடியான்' என்ற வெண்பாவினால், அதன் ஆசிரியர் சமயக் கோட்பாட்டிற் சைவராவர் எனக் கருத இடந்தருகிறது. மேலும் முத்தொள்ளாயிரச் செய்யுளுக்கும் ஆழ்வா பாசுரத்துக்கும் உள்ள சில ஒற்றுமை நயங்களையும் இனிக் காண்போம்.

அவர் 'செங்க ணெடியான்' என்றார். இவர் 'உலகளந்த தீர்த்தன்' என்றார். நெடியான் உலகளந்த உத்தமனான செங்கண்மாலே. அவர் 'தேர் விசயன்' என்றார். இவர் 'பார்த்தன்' என்றார். பார்த்தசாரதியாய்த் திகழ்ந்தது அவன்தன் தேர்முன் நின்ற காலத்தே. அதனால் தேரோடு சேர்த்துப் பேசுகிறார் அவர். 'ஏற்றிய பூ' என்றார் அவர். 'பூந்தாமம்' என்றார் இவர். 'கண்டு' என்று இருவரும் பிரயோகிக்கின்றனர். மேலும் 'மாறன்' எனப் பேசினார் அவர். இது இத்திருவாய்மொழியின் திருநாமப் பாசுரம்:—

''கண்தலங்கள் செய்ய கருமேனி யம்மானை
வண்டலம்புஞ் சோலை வழுதி வளநாடன்
பண்தலையில் சொன்னதமி ழாயிரத்திப் பத்தும்வல்லார்
விண்தலையில் வீற்றிருந் தாள்வாரெம் மாவீடே.'' (2—8—11)

இதில் இவர் 'வழுதி வளநாடன்' எனத் தம்மைக் குறித்துள்ளமை கண்டு தெளிக. எங்கு முடிமன்னர் சூடிய பூ, மொய்ம்மலர்த் தார் மாறன் (வகுளாபரணராகிய சடகோபன்) அடிமிசையே காணப்படும் என அவ்வேந்தர் யாவரும் 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்று மாறன் திருவடிக் கீழ் வாழ்வை யுகக்குமவர் என்றலு மொன்று.

இவ்வாழ்வார் பரமன் வையந் தாவிய விவரத்தைக் குறிக்கையில்,

"ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை
வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து
மேல்தன்னை மீதிட நிமிர்ந்து மண்கொண்ட
மாறனில் மிக்குமோர் தேவு முளதே?"

—(திருவாய்மொழி 2—2—3)

என்று கூறியது நன்கு ஆழ்ந்து நோக்குதற்கு உரியது.

'மாறனில் மிக்குமோர்தேவில்லை' என்ற மதுரகவி கண்ட உண்மையே உண்மை. பண்டைத் தமிழ்ச் சான்றோரை நம்மாழ்வார் பலவிடங்களிற் பாராட்டியுள்ளார். இதனைப் பிறிதோ ரமயம் விளக்குவல். நன்றிமறவாமையே நற்றமிழர் என்றும் அநுட்டிப்பது. வாழ்க மாறன். வளர்க அவன் ஆயிரம். பல்குக அவனடியார். வாழ்க உலகெலாம்.

"தேன ரும்மகிழ்த் தொடையலு மவுலியுந்
திருக்கிளர் குழைக்காதும்
கான ருமலர்த் திருமுகச் சோதியுங்
கயிரவத் துவர்வாயும்
மோன மாகிய வடிவமு மார்பமு
முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையுமென்
னயனம்விட் டகலாவே.

—(பெருந்தொகை. 1824)

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌵𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

செய்திகள்

1

ஸ்ரீ அஹோபிலமடம் 41-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷாராதந மஹோத்ஸவம்

𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌠𑌾𑌰𑌿 𑌶𑌠𑌕𑍋𑌪 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌰𑌶𑍍𑌮𑌿
[illegible] 𑌸𑌾𑌵𑌧𑌾𑌨𑌚𑍇𑌤𑌃 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾 [illegible]
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌶𑌠𑌕𑍋𑌪𑌮𑍁𑌨𑌿𑌂 𑌭𑌜𑌾𑌮𑌃 ॥

சென்ற ஐப்பசிமீ 20உ (5—11—48) சுக்ல பஞ்சமி வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யாஸ்தாநத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபி

ஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய ஏழாவது வர்ஷாராதந கைங்கர்ய மஹோத்ஸவம், ஸ்ரீ அழகிய சிங்கருடைய அவதார ஸ்தலமான காருகுரிச்சியில், ஷை ஸ்வாமியின் புத்ரரான ஸ்ரீ. உப. தட்டை வாதூல கோபால ரங்காசார்ய ஸ்வாமியின் திருமாளிகையில், வேத பாராயண திவ்ய ப்ரபந்த க்ரந்த சதுஷ்டயாதி பாராயணங்களுடன், ஐப்பசிமீ 16௳ உபக்ரமிக்கப்பட்டு 20௳ வெள்ளிக்கிழமை திநம் முடிவடைந்தது. அந்த மஹோத்ஸவத்துக்கு அநேக மஹான்கள் ஸகுடும்பமாய் எழுந்தருளிக் கைங்கர்யத்தில் அந்வயித்து ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹத்துக்குப் பாத்ரமானார்கள்.

2

நாளது ஸர்வதாரிஹு ஐப்பசிமீ 20௳ (5—11—48) வெள்ளிக்கிழமை யன்று, ஸ்ரீ அஹோபிலமடம் திவ்யாஸ்தாநத்தில் 41-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேத மார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வர்ஷாராதந மஹோத்ஸவம், பெருமாள் கோவில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸேவை சாத்துமறை ஸம்பாவநாதிகளுடன் இனிது நடைபெற்றது.

கோ. ஸுதர்சநாசார்யர்.

3

விண்ணாற்றங் கரையில் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம்

தஞ்சாவூரை யடுத்த விண்ணாற்றங் கரையில் ஸ்ரீ நீலமேகன் ஸந்நிதியில் இவ்வருஷம் புரட்டாசிமீ ஸ்ரீ தேசிகன் உத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தது. உபய கோஷ்டிகளையும் அலங்கரிக்க அநேக ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தனர். வழக்கம் போல் இவ்வூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸபையாரால் ப்ரதி திநமும் உபந்யாஸங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது., ப்ரதாநமாக ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஆறும் உத்ஸவம் முதல் சாத்துமறை பர்யந்தம் எழுந்தருளி யிருந்து ப்ரதி திநம் உபந்யாஸம் செய்தது போற்றத்தக்கதாகும்.

முதல் நாள் உபந்யாஸம்:—ஆசார்யோத்ஸவங்கள் அவச்யம் செய்யப்பட வேண்டியவை; அவை நித்யங்கள். இரண்டாம் நாள்:—ஆசார்யர்களின் ப்ரபாவங்கள்; மூன்றும் நாள்:—ஆசார்யர்கள் யாவரிலும் ஸ்ரீ தேசிகனுக்குள்ள ஏற்றம். ஸ்ரீ தேசிகனுடைய கல்யாண குணங்கள். நாலாம் நாள்:—'பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு'—என்னும் தனியனின் விரிவான அர்த்தம். ஐந்தாம் நாள்:— 'ஸுகம்' என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு அதிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய தத்வங்கள். ஸ்ரீ ஸ்வாமியின் இந்த உபந்யாஸங்கள் மிகத் தெளிவாயும் பாமரர்களுக்கும் எளிதாய்ப் புரியும்படியும் இருந்தமையால் யாவரும் கேட்டுப் பரமாச்சர்ய மடைந்தனர். சாத்துமறை ஸமயத்தில் கூடியிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் ஸ்வாமியை அடிக்கடி இம்மாதிரியான உபந்யாஸங்களைச் செய்யவேண்டு மென்று ப்ரார்த்தித்தார்கள்! ஸ்வாமியும் அங்கீகரித்தருளினர். உத்ஸவம் இனிது முடிவுற்றது.

K. S. நரஸிம்ஹ ஐயங்கார்
[ஸ்ரீ. வை. ஸபைக் கார்யதர்சி, தஞ்சை.]

4

ஸ்ரீ வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸபை, மாதுங்கா, பம்பாய்

பம்பாய் நகரத்தைச் சேர்ந்த மாதுங்காவில் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய ஸபையின் ஆதரவில், இங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களால் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 3—10—48 முதல் 12—10—48 வரையில் பத்துத் திநங்கள் தேசகாலாநுகுணமாய் வேதபாராயண திவ்ய ப்ரபந்த தேசிக ப்ரபந்த பாராயணங்களுடன் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ததீயாராதநமும் விசேஷமாக நடைபெற்றது. ஸ்வாமி தேசிகனுடைய திருவவதார திநத்தன்று இவ்விடம் பநஸ்வாடியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ திருவேங்கடமுடையான், ஸ்ரீ ஸ்வாமிக்குத் தமது மாலை மர்யாதைகளை ப்ரஸாதித்தருளியது மிகவும் விசேஷமாயிருந்தது.

ஷை ஸபையோரால் புரட்டாசித் திருக்கேட்டை யன்று ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. இந்த வர்ஷம் இந்த மஹோத்ஸவங்கள் விசேஷ வைபவங்களுடன் நடைபெற்றதற்கு, ஸ்ரீ. உப. சக்ரவர்த்தி விஜயராகவாசார்ய ஸ்வாமி எடுத்துக்கொண்ட பெரு முயற்சியும், ஸ்ரீ கோபீநாத்லால் பாங்கர் என்னும் மஹானுடைய த்ரவ்ய ஸஹாயமும், மற்றுமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆர்வத்தோடு த்ரவ்ய ஸஹாயம் செய்ததுமே காரணமாகும்.

ஒரு ஸ்ரீவைஷ்ணவ தாஸன்

5

ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உப. N. ராமஸ்வாமி ஐயங்காருடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி விழா

ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உப. N. ராமஸ்வாமி ஐயங்காருடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி உத்ஸவம், ஸ்ரீரங்கம் வடக்குச் சித்ர வீதியில் அவரது திருமாளிகையில் (31—10—48)ல் வெகு விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. ஷஷ்ட்யப்த பூர்த்தி திநத்திற்கு 5-நாட்கள் முன்னர், யஜுஸ் ஸாம வேதபாராயணங்களுடன் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் உபக்ரமிக்கப்பட்டது. புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸந்நிஹிதராக எழுந்தருளியிருந்து, இவ்விழாவைச் சிறக்க நடப்பித்து அநுக்ரஹித்தது போற்றததக்கதாகும். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ப்ரஹ்லாதாழ்வானை அநுக்ரஹித்தது போல் ஸ்ரீமதழகிய சிங்கர் இத்தம்பதிகளைப் பரிபூர்ணமாய் அநுக்ரஹிக்கும்படி யிருந்தது. ஸ்ரீ. உப. V. V. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி முதலிய மஹான்கள் அன்புடன் ஆசிச் செய்திகள் அனுப்பி அநுக்ரஹித்தனரென்று ஒரு ஸுஹ்ருத் அறிவிக்கிறார்.

6

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸபா, தேரழுந்தூர்

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வார்ஷிகோத்ஸவம்

ஸ்ரீ அழகிய சிங்கருடைய திவ்ய நியமநத்தை முன்னிட்டு இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவம் புரட்டாசி மாஸம் 14-ம் தேதி முதல் 10 நாட்கள் விசேஷமாக நடைபெற்றது. முதல் உத்ஸவம் முதற்கொண்டு புதுக்கோட்டை வித்வான் ஸ்ரீ. உப. வங்கிபுரம் காளி ரங்காசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ மடத்து ஏஜெண்ட் ஸ்ரீ. உப. K. கோபாலையங்கார் ஸ்வாமியும் உட னிருந்து, உத்ஸவத்தைப் பூர்த்தி செய்வித்தருளினார்கள். புரட்டாசி மாஸம் 23-ம் தேதி வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ ஸ்வாமி விசேஷ திருமஞ்ஜநம் கண்டருளி, பெருமாளுடைய சத்ர சாமர மர்யாதைகளுடன் அடியார் குழாங்கள் புடை சூழ ஸ்ரீ ஆமருவியப்பன் ஸந்நிதிக்கு எழுந்தருளி,

பெருமாள், தாயார், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், ஆண்டாள், ஸ்ரீ தேசிகன் முதலானோரை மங்களாசாஸநம் செய்யும்படி இருந்தது. ததநந்தரம் வீதி ப்ரமணமாக ஸ்ரீ ஸ்வாமி மடத்திற்கு எழுந்தருளி சாத்துமறை மஹோத்ஸவம் வெகு ஸம்ப்ரமமாகக் கண்டருளினர். அவ்வமயம் அத்யாபகர் ஸ்ரீ. உப P. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ப்ரக்ருதம் ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாநத்தை அலங்கரித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகிய சிங்கருடைய கல்யாணகுணங்களைப்பற்றி விரிவாக உபந்யஸித்தார். கோஷ்டி பகல் ஒரு மணிக்கு விநியோகத்துடன் இனிது முடிவுற்றது.

ஸரஸ்வதி பூஜா மஹோத்ஸவமும் கடிகாரத்திறப்பு விழாவும்

11—10—48 திங்கட்கிழமை யன்று மாலை 4-மணிக்கு மேற்படி ஸபையிலுள்ள ஸத்ஸம்ப்ரதாய ஸ்ரீ கோசாலபத்தில் ஸரஸ்வதி பூஜா மஹோத்ஸவம் நன்கு நடைபெற்றது. அன்று ஸ்ரீ. உப. காளி ரங்காசார்ய ஸ்வாமி, 'தேவீ மாஹாத்ம்யம்' என்னும் விஷயத்தைப்பற்றி அழகாக உபந்யஸித்தார். உபந்யாஸாநந்தரம் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸபைக்கு அநுக்ரஹித்த பெரிய கடிகாரத்தை ஸபையோர்கள் ப்ரார்த்தனைக்கு இணங்கி ஸ்ரீ வித்வான் ஸ்வாமி திறந்து வைத்தார். இக்கூட்டத்தில் ஷை ஸபை கார்யதரிசி ப்ரேரேபித்த தீர்மாநங்கள் சில ஏகமனதாக நிறைவேறின.

இவ்வர்ஷம் ஸபையின் வார்ஷிக மஹோத்ஸவத்திற்குத் தலைமை தாங்கி அதைச் செவ்வனே நடத்திக்கொடுத்த சென்னை தேசிக தர்சந ரத்நதீபம் ஸ்ரீ. உப. V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, சென்னை ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, முதலான வித்வான்களை எழுந்தருளப்பண்ணவேண்டுமென்றும், ஸபையில் யாதொரு மூல தநமும் இல்லாமையால் ஆஸ்திகாக்ரேஸரர்களும் மடாதிபதிகளும் உள்ளூர் வாஸிகளும் சென்ற ஆண்டிற்போல உதவி, நாளை கார்த்திகை மாதத்தில் வரும் நான்காம் ஆண்டு விழா வைபவத்தைச் செவ்வெனே நடத்திக்கொடுக்க வேண்டுமென்றும், த்ரவ்ய ஸஹாயம் செய்பவர்கள், ஸ்ரீ. உபய. தேரழுந்தூர்–T. S. ஸுந்தரமய்யங்கார் ஸ்வாமிக்கோ, அல்லது T. S. S. ரைஸ் மில், குற்றாலம் போஸ்ட், தஞ்சை ஜில்லா–என்ற விலாஸத்திற்கோ அனுப்பி உதவவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 22—7—48ல் ஸபை நூல் நிலயத்திற்கு இவ்வூர் ஸ்ரீ. உப. T. A. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமி இலவசமாக ரூ. 200 மதிப்புள்ள உயரிய ஸ்ரீ கோச க்ரந்தங்களை அநுக்ரஹித்ததற்கு ஷையார்க்கு வந்தநம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஷை ஸபையின் நான்காவது வார்ஷிக மஹோத்ஸவம் நாளது கார்த்திகை மாதம் 25, 26-ம் தேதி, வெள்ளி சனிக்கிழமைகளில் வருகிறது.

சென்னை ஸ்ரீ ராஜாஜி ஹாலில் சென்ற 8, 9, 10-ம் தேதிகளில் நடைபெற்ற நான்காவது கம்பர் மஹாநாட்டிற்கு நமது ஸபை கார்யதர்சி ஒரு மகிழ்ச்சிச் செய்தி அனுப்பினர்.

ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத காலேஜ் வைஸ் ப்ரின்ஸ்பல் வித்வான் வில்லிவலம் ஸ்ரீ. உப. நாராயணாசார்ய ஸ்வாமி நமது ஸபைக்கு எழுந்தருளி, நமது ஸபையிலுள்ள ஸ்ரீ கோசாலயத்தையும் கடாக்ஷித்தருளினது போற்றத்தக்கது.

ஸ்ரீ ஆமருவிபப்பன் ஸந்நிதியில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவம் மிகு விசேஷமாக நடைபெற்றது. ஷை மஹோத்ஸவத்தை முன்னிட்டு 29௳ வியாழக்கிழமை ஸ்ரீ ஆமருவியப்பனுக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் விசேஷ தெப்போத்ஸவமும், மறுநாள் ஸ்ரீ தேசிகனுக்கு ப்ரத்யேகமாகத் தெப்போத்ஸவமும் நடைபெற்றன. ஏராளமான ஸேவார்த்திகள் வெளியூரிலிருந்து வந்திருந்தார்கள்.

கடாம்பி R. நரஸிம்ஹாசார்யர்
[கார்யதர்சி]

7
ஒரு மஹானின் மறைவு

தஞ்சை ஜில்லா ஸ்ரீ கல்யாணபுரம் க்ராம வாஸியும், போஸ்ட் மாஸ்டரும், மிராசுதாரருமான ஸ்ரீ. உப. அல்லுண்டு திருவேங்கடாசார்யர், சென்ற ஐப்பசிமீ 15உ (31—10—48) ஆசார்யன் திருவடிகளை அடைந்ததைக் கேட்டு வருந்துகிறோம். அந்த ஸ்வாமி நம் பத்ரிகையின் லேககாரன ஸ்ரீ. S T. ஸ்ரீநிவாஸாசார்யரின் ச்வசுரர். தார்மிகர். ஸம்ப்ரதாயத்தில் மிகுந்த ஆர்வ முடையவர். பகவத் பாகவத ஸேவா துரந்தரர். வள்ளன்மை உடையவர். இவருடைய பிரிவினல் நம் தர்ஶநத்துக்கு ஒரு நஷ்டம் ஏற்பட்டது ஶோசிக்கத்தகுந்தது.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வதாரி ஞு மார்கழி (தநுர்) மீ

15—12—48	1உ புதன்கிழமை	—	சூந்யதிதி: சாபரவி 14-27 ஷடசீதி. அதற்கு மேல் ஸங்க்ரமண தர்ப்பணமும் தநுர் மாஸாராதநமும்.
16—12—48	2உ வியாழக்கிழமை	—	சாப பூர்ணிமா திதி
17—12—48	3உ வெள்ளிக்கிழமை	—	ப்ரதமை த்விதீயை திதி த்வயம்
26—12—48	12உ ஞாயிற்றுக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
27—12—48	13உ திங்கட்கிழமை	—	ஸ்ரீ அஹோபில மடம் 40-ம் பட்டம் ஸ்ரீ ரங்கநாத ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
28—12—48	14உ செவ்வாய்க்கிழமை	—	ஸ்ரீ தொண்டரடிப்பொடி யாழ்வார் திரு நக்ஷத்ரம்
29—12—48	15உ புதன்கிழமை	—	க்ருஷ்ண சதுர்த்தசி திதி
30—12—48	16உ வியாழக்கிழமை	—	அமாவாஸ்யை திதி; ஸர்வ அமாவாஸ்யை
31—12—48	17உ வெள்ளிக்கிழமை	...	சுக்ல ப்ரதமை திதி

ஜனவரி-1949

5— 1—49	22உ புதன்கிழமை	—	ஸ்ரீ அஹோபில மடம் 41-ம் பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
11— 1—49	28உ செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ (வைகுண்ட) ஏகாதசி
13— 1—49	30உ வியாழக்கிழமை	—	சாப மகர சுக்ல சதுர்த்தசி திதி: [தை (மகர) மாஸத்தில் சுக்ல சதுர்த்தசி இல்லை. இந்த மாஸத்தில் 1உ, 30உ-இவ்விரண்டு திநங்களிலும் சதுர்த்தசி பூர்ணமாக இருக்கிறது. ஆனல் இரண்டும் ஸங்க்ரமண துஷ்டம்; ஆகையால் உத்தர திதியே க்ராஹ்யம்.] மகர ரவி 35. 20 [உத்தராயணப் பிறப்பாகையால் ஸங்க்ரமண தர்ப்பணம் மறுதிநமே.] போகிப் பண்டிகை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽநக: ப்ரவிஶ்ய மம வாஙிஶாம் ப்ரஸந்நாம்
ஸஞ்ஜீவயத்யதிமுஶக்தியுத: ஸ்வயந்தா ।
ச ந்யாஸ்ய ஹஸ்த அரண ஶ்ரவண ஸுகாதீந்
ப்ராணாந்நமோ ஹமவதே பரமபுருஷாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஆலய ப்ரவேசம்

'ஆலய ப்ரவேஶம்' என்று வ்யவஹரிக்கப்படும் வ்யாபாரத்தால், ஆலயங்களுக்கு ஒரு தோஷம் ஸம்பவித்து விடுகிறதா? இல்லையா? என்னும் விஷயத்தைப்பற்றிப் பஹு ப்ரகாரமான சர்ச்சை எவ்விடத்திலும் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய ந்ருஸிம்ஹ ப்ரியையிலும் அது பல விதமாகப் பல பெயர்களால் விசாரிக்கப்பட்டு, அவரவர்கள் தந்தமக்குத் தோன்றும் நிர்ணயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளுள் எது ஶாஸ்த்ர ஸம்மதமோ அதுவே நமக்கு க்ராஹ்யமாக வேண்டும். ஆலய ப்ரவேச வ்யாபாரத்தால் ஆலயங்களுக்குத் தோஷம் ஸம்பவித்து விடுகிறதென்றும், ஆகையால் அவ்விடத்தில் தைவ ஸாந்நித்யம் இல்லையென்றும், இதுவே ஶாஸ்த்ர ஸம்மதமென்றும் பஹு ஶாஸ்த்ரஜ்ஞர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த நிர்ணயமே நமது யுக்திக்கு எவ்வளவு அநுபபந்நமாக அது தோன்றினபோதிலும் நமக்கு க்ராஹ்யம். ஆகையால் இதைப் பற்றிய விசாரம் இனி ப்ரயோஜநவத்தாக இருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. இது ஸம்பந்தமான விசாரம் இனி ந்ருஸிம்ஹ ப்ரியையில் ப்ரசுரம் செய்யப்படமாட்டாதென்பதை நாம் நமது ஸுஹ்ருத்துக்களுக்கு விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறோம்.

*   *   *   *   *

ஜந்மாத்யதிகரண விஷய விசாரம்

மதுராந்தகம் வித்வான் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி ஸந்நிதியிலும், ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி ஸந்நிதியிலும் ஜந்மாத்யதிகரண விஷயத்தைப்பற்றி அடியேன் மறுபடியும் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளும்படி ஸம்பவித்திருக்கிறது. அந்த ஸ்வாமிகளுடைய திவ்ய ஸூக்திகளால் அடியேனுக்குப் பூர்வம் அஜ்ஞாதமாயிருந்த அநேக விஷயங்கள் தெளிய அறியப்பட்டன. அதற்கு அந்த ஸ்வாமிகளின் திருவடிகளில் அடியேனுடைய க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

அடியேன் எழுதின குறிப்பில் ஒரு விதமான நூதந அம்ஶமும் இல்லை. 'ஜந்மாதி' இத்யாதியால், ஜகதுபாதாந காரணத்வம் ஸூக்ஷ்ம சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்ம நிஷ்ட மென்றும், நிமித்த காரணத்வம் விஶேஷ்ய பூத ஸ்வரூப நிஷ்ட மென்றும், ஆகையால் ஒரே ப்ரஹ்மத்திற்கு விஶிஷ்டாகாரேண ஜகதுபாதாநத்வ மும் ஶுத்த ஸ்வரூபேண நிமித்த காரணத்வமும், ஆக உபய வித காரணத்வமும் ஸாதிக்கப்படுகிற தென்றும், ஸ்ரீ பாகவதம் ப்ரதம ஸ்கந்தத்தில் 'ஜந்மாத்யஸ்ய யத:' என்னும் வாக்யத்தை விவரிக்குங் காலத்தில் 'வீரராகவீயம்' என்னும் வ்யாக்யாநத்தை அநுக்ரஹித்திருக்கும் ஸ்ரீ வீரராகவாசார்ய ஸ்வாமி வ்யாக்யா நித்திருக்கிறார். இந்த விசாரத்தை முடிக்கு மிடத்தில் பின் வருமாறு நிகமநத் தையும் காணலாம்.

"ஏவம் ச ஜந்மாதிகாரணத்வம் விஶிஷ்டப்ரஹ்மணோ விஶேஷணபூதம்
லக்ஷணம்; விஶுத்தஸ்வரூபஸ்ய து உபலக்ஷணமித்யவகந்தவ்யம்"

இதிலிருந்து அடியேன் விண்ணப்பித்துக்கொண்டது ஸ்ரீ வீரராகவீயத்தின் அநுவாத மென்றே அந்த ஸ்வாமிகள் திருவுள்ளம் பற்றவேண்டும். "இதில் ஜந்மாதிகாரணத்வம் விஶிஷ்ட ப்ரஹ்மத்திற்கு விஶேஷண பூதமான லக்ஷணம்; விசுத்த ஸ்வரூபத்திற்கு அது உபலக்ஷணதயா லக்ஷணம்" என்று விளக்கப் பட்டும் இருக்கிறது. உபலக்ஷகமா யிருப்பதற்குத் தர்மி நிஷ்டத்வம் இல்லை யாதலால், இரண்டு லக்ஷணங்களும் ஒரு அம்ஶத்தில் அஸாதாரண தர்ம கடித மில்லை. ஆதலால் அவை ஒரு விதமான ந்யூநதையை உடைத்தா யிருக் கின்றன வென்றே சொல்லவேண்டும். அப்பொழுது ஒன்றை த்யஜித்து மற்றொன்றை ஸ்ரீ வ்யாஸ பகவான் க்ரஹிப்பதற்கு ஹேது வில்லையே. இது தான் ஸந்தேஹம்.

* * * * *

இந்த வர்ஷம் புரட்டாசி மாஸம் திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ. தேசிகனுடைய மஹோத்ஸவம் மிக்க வைபவத்துடன் நடந்தேறிற் றென்று நாம் அறிகிறோம்.

ஸ்ரீ தேசிகன் திரு மாளிகை தர்ம பரிபாலந ஸபை

ஸ்ரீ தேசிகன் கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் பலர் அம்மஹோத் ஸவத்திற்குத் திரளாக வந்து ஸேவை ஸாதித்தனர். அத்திவ் யோத்ஸவத்தின் நடுவில் (புரட்டாசி 24-ம் தேதி 9—10—48) ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் அட்வகேட் ஸ்ரீ. உப. டி. ஆர். சக்ரபாணி அய்யங்கார் ஸ்வாமி தலைமையில் ஒரு ஸங்கம் கூடிற்று. ஸ்ரீ தேசிகன் திருமாளிகையைப் புதுப்பித்து அதை ஸம்ரக்ஷணம் செய்தல், அந்த ஸ்தலத்தில் ஒரு நூல்நிலயம் (Library) ஏற்படுத்துதல், அந்தத்

திருமாளிகையில் ஸ்வாமியே தமது திருக்கரங்களால் கட்டிய கிணற்றைப் பரிஷ்காரம் செய்தல், நாலு பக்கங்களிலும் சுவர்களில் சலவைக் கற்களை அமைத்து, அவற்றில் நமது புராண கதைகள் ஸம்பந்தமான சித்ரங்களை எழுதுதல், காந்த விளக்குகளை அமைப்பித்து அந்தக் கட்டிடத்தை ஜ்யோதிர்மயமாக ஆக்கல், இம்மாதிரியான பல கைங்கர்யங்களை நடத்தவேண்டுமென்று அந்த ஸங்கத்தில் தீர்மாநம் செய்யப்பட்டது. இதை நிறைவேற்றுவதற்கு, 'ஸ்ரீ தேசிகன் திருமாளிகை தர்ம பரிபாலந ஸபை' என்னும் பெயருடன் ஒரு புதிய ஸங்கமும் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த ஸங்கத்தில், ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியை அத்யக்ஷராயும், ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமியையும் ஸ்ரீ. உப. டி. ஆர். சக்ரபாணி அய்யங்கார் ஸ்வாமியையும் உபாத்யக்ஷர்களாகவும், தஞ்சாவூர் ஸ்ரீ. உப. ஆர். ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியையும் திருவஹீந்த்ரபுரம் தேவஸ்தாந தர்மகர்த்தாவாகிய ஸ்ரீ. உப. கே. எஸ். ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியையும் கார்யதர்சிகளாகவும், சென்னை பார்க் டவுனில் எழுந்தருளியிருக்கும் அட்வகேட் ஸ்ரீ. உப. வி. ஆர். ராஜ கோபாலாசார்ய ஸ்வாமியைத் தநாத்யக்ஷராகவும், இவ்வாறு அப்பொழுது அந்த ஸங்கத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தவர்கள் தாத்காலிகமான ஒரு நிர்வாஹ கமிட்டியை ஏற்படுத்தினார்கள்.

கீழ்ச் சொல்லப்பட்டுள்ள நோக்கங்களுடன் மற்றுமொரு ஒரு நோக்கத்தை அவர்கள்முக்யமாகத் திருவுள்ளத்தில் கொண்டிருப்பதாக நாம் அறிகிறோம். அதென்னவென்றால்:-ஸ்ரீதேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ளக்ரந்தங்களை அச்சுப்பதிப்பித்து ப்ரசுரித்தல் என்பதுதான். பின்னானோர் பிறவிக் கடலுள் அழுந்தாது உய்யும் பொருட்டுப் பல க்ரந்தங்களை ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருக்கிறார். அவைகளை ப்ரசுரம் செய்வதாக இவர்கள் கொண்டிருக்கும் நோக்கத்தை நாம் மிக்க ஆநந்தத்துடன் ஆமோதிக்கிறோம். மனத்தில் எழில் ஞான விளக்கை ஏற்றி இருளனைத்தும் மாற்றுவதற்காகவே ஸ்வாமி தேசிகன் அநேக க்ரந்தங்களை அமைத்திருக்கிறாரன்றோ? அவைகளை ஸகல ஜநங்களுக்கும் உபகாரகங்களாகச் செய்வது மிக ச்லாக்யமான கைங்கர்யம். இதற்கு முன் இரண்டொரு ஸமயங்களில் இந்தக் கைங்கர்யத்தை நிறைவேற்றுவதற்காகச் சில ஆஸ்திகர்கள் ப்ரயத்நம் செய்ததை நாம் அறிவோம். ஆனால் 'ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி' என்கிறபடி அந்த ப்ரயத்நங்கள் தலைக்கட்டப்படாமல் நின்றுவிட்டன. ஸ்ரீ தேவநாதனுடைய ஸங்கல்பத்தாலும், ஸ்வாமி தேசிகனுடைய அநுக்ரஹத்தாலும், ப்ரக்ருத ஸங்கத்தாரால் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த நோக்கம் எவ்வித விக்நமு மின்றிக்கே சீக்ரத்தில் நிறைவேறிவிடும் என்று நாம் நம்புகிறோம்.

இந்த ஸங்கத்தின் அங்கத்தினர் பின்வருமாறு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். 1. ரூபாய் நூறுக்குக் குறையாமல் கொடுப்பவர் ஸபையின் போஷகர்கள்; 2. ரூபாய் இருபத்தைந்துக்குக் குறையாமல் கொடுப்பவர் யாவதாயுஷம் அங்கத்தினர்; 3. வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று கொடுப்பவர் கூட்டங்கத்தினர். இத்தகைய இந்த ஸபையில் நம் ஸம்ப்ரதாயஸ்தர் யாவரும் அங்கத்தினராகச் சேர்ந்து ஒத்துழைத்து நம் தர்ஶநம் தழைத்தோங்குமாறு செய்யவேண்டுமென்பது நமது ஹார்த்தமான ப்ரார்த்தனை.

*　　*　　*　　*

பங்களூர் ஸ்ரீ. பி. கே. கருடாசார்யர்

'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:' என்பது மஹர்ஷிகளின் வாக்யம். ஸ்வாமி தேஶிகன் நமது ஆழ்வாராசார்யர்களைப் பற்றி ப்ரஸ்தாவிக்குங் காலத்தில் இந்த வாக்யத்தை உதாஹரித்திருக்கிறார். 'நாராயணபராயணா:' என்னும் பதம், மஹத்தான வைராக்யத்தைப் பெற்று, ஸம்ஸார ஸம்பந்தத்தை அடியோடு த்யஜித்துவிட்டு, அநந்ய தேவதாகராகவும் அநந்ய ப்ரயோஜநராகவும் நாராயணன் ஒருவனையே தொழுதுகொண்டு, அவனைத் தொழுவதையே ப்ரயோஜநமாகக் கைப்பற்றி வர்த்தித்துவரும் வைதிகோத்தமர்களைக் குறிக்கும். ஆனால், ஒருவர் எவ்விடத்திலாவது, நாரயணனிடத்தில் பக்தி எள்ளளவும் குறையாமல் அவனிடத்தில் பரம தாஸ்யத்தைக் கொண்டாடி வருகையில், 'நிற்கின்றதெல்லாம் நெடுமால்' என்றபடி பகவச் ஶரீரமென்று எண்ணி நம்முடன் கூட வர்த்தித்துவரும் ஸாமாந்ய ஜநங்களும் பகவானுடைய அன்புக்குப் பாத்ரமானவர்களென்றும், அவர்கள் ஆர்த்தர்களாகவும் விஷண்ணர்களாகவும் இருக்கும் பக்ஷத்தில் அவர்களுக்கு அபேக்ஷிதமான உதவி புரிந்து அவர்களுடைய க்லேஶத்தை நிவர்த்தித்து அவர்களை ஆத்மஜ்ஞாந ஸம்பாதநத்திற்கு அர்ஹர்களாகச் செய்வதும் எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கு உகந்ததான கைங்கர்யமாகுமென்றும் நம்பி, அதில் தமது த்ரிகரணங்களைச் செலுத்தி வருபவராகத் தென்பட்டால், அவரையும் அந்தப் பதம் குறிக்குமென்று நாம் சொல்லலாமன்றோ? அஶாஸ்த்ரீயமான வ்யாபாரத்தில் ப்ரவேஶியாமல் இருக்கும் பர்யந்தம் அவர்கள் நம்மால் பூஜ்யர்களென்று கொண்டாடத்தக்கவர்களே.

அம்மாதிரியான புண்யஶாலிகள் நம்முடைய தேஶத்தில் சிற்சில விடங்களில் காணப்படுகிறார்கள். பங்களூர் லோகஸேவாஸக்த ராவ்பஹதூர் ஸ்ரீமான் பி. கே கருடாசார்யர் என்பவர் அவர்களுள் ஒருவர். அவருக்கு மஹாஜநங்களால் கொடுக்கப்பட்ட 'லோகஸேவாஸக்தர்' என்னும் பிருதே அவருடைய உத்தமமான கல்யாண குணத்தை விளக்குகின்றது. அவர் பங்களூரில் பெரியோரென்று ப்ரக்யாதி பெற்ற ஒரு மஹாகுலத்தில் பிறந்து, வர்ணாச்ரம தர்மா

நுஷ்டாநத்திற்கு உரியவையான ஸம்ஸ்காரங்களைப் பெற்று, காலத்திற்கு அநுகுணமான பாஷாந்தர ஜ்ஞாநத்தை ஸம்பாதித்ததுடன், தமது ஆசார்யர்களிடமிருந்து அத்யாத்ம ஜ்ஞாநத்தையும் அடைந்தார். பிறகு தமக்கு வயது வந்த காலத்தில் மஹாஜநங்களுக்கு உதவி புரிவதே ச்லாக்யமான தர்மமென்று எண்ணி, அந்த வ்யாபாரத்திலேயே தமது தேஹத்தையும் காலத்தையும் தநத்தையும் விநியோகித்துவந்தார். பங்களூரில் துளஸித் தோட்டமென்று வ்யவஹரிக்கப்பட்டுவரும் பெரியதொரு தர்ம ஶாலை அவருடைய நன்கொடைகளிலொன்று. பங்களூருக்குப் புதிதாகப் போகும் வைதிகாநுஷ்டாந ரஸிகர்களுக்கு அது ச்லாக்யமான விச்ரம ஸ்தாநம். அதில் அநேக ஸ்ரீ வைஷ்ணவ வித்யார்த்திகளுக்கு ப்ரதிதிநம் தர்மமாக அந்நம் போடும் ஒரு போஜநஶாலை நடத்தப்பட்டு வருகின்றது. ப்ராஹ்மண ஸபை என்று பங்களூரில் நடத்தப்பட்டுவரும் பெரியதொரு ஸபைக்கு மூலதநமொன்றை இவர் ஏற்படுத்தியிருக்கிறார். இம்மாதிரியான தர்மங்களை இவர் நடத்தி வந்ததுடன், கணக்கற்ற ஏழை ஜநங்களுக்குத் தந உதவியையும் செய்து வந்திருக்கிறார். இவருடைய ஔதார்யத்தையும் விஶாலமான மநஸ்ஸையும் நன்கு உணர்ந்து, ராஜாங்கத்தாரும் இவரை அநேக தர்ம பரிபாலந ஸபைகளில் ப்ரதாந அங்கத்தினராக நியமித்து வந்ததோடு, இவரிடத்தில் உயர்ந்த புரஸ்காரத்தையும் செய்து வந்தார்கள்.

இவர் ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்யர்களுள் மிகச் சிறந்தவர்களுள் ஒருவர். இப்பொழுது ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவடிகளில் ஆத்மரக்ஷாபரத்தை ந்யாஸம் செய்தவர். சற்றேறக்குறைய ஐந்தாறு வருஷங்களுக்குமுன் ஸ்ரீ அழகிய சிங்கர் பங்களூருக்கு யாத்ரோத்ஸவமாக எழுந்தருளினபொழுது, இவர் ஒருவரே மூன்று மாஸ காலம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஆராதித்து வந்தது ஜகத் விதிதம். ஸ்ரீ அழகிய சிங்கருடைய பரிஜநங்களெல்லாரும் அப்பொழுது அவர் தமக்குச் செய்த ஸத்காரங்களை மிக்க பெருமையுடன் இப்பொழுதும் ச்லாகித்துப் பேசுவதை நாம் கேட்டுவருகிறோம். கிம்பஹுநா. இவரொரு மஹா புண்ய புருஷன். இவர் சென்ற வைகாசி மாஸம் 31௳ ஞாயிற்றுக்கிழமை காலையில் [13-6-48] 73-வது வயதில் இந்த விபூதியை விட்டு நித்ய விபூதியை அடைந்தார்.

இவருடைய நிர்யாண காலத்தில் விஶேஷித்த ஸம்பவமொன்று நேர்ந்ததாக நாம் அறிகிறோம். அந்த ஸமயம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காருடைய முயற்சியால், செங்கல்பட்டு ஜில்லா செட்டிபுண்யம் என்னும் க்ராமத்தில் பெரியதொரு மஹோத்ஸவம் நடைபெற்று வந்தது. வைகாசிமீ 31௳ அந்த உத்ஸவத்தின் கடைசித் திநம். அன்று பெரியதொரு ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டி திவ்ய ப்ரபந்தத்தை ஸேவித்து வந்தது. அப்படி ஸேவித்து வருகையில்,

சரியாக $7\frac{1}{2}$ நாழிகைக்கு 'மஞ்சுலாவு சோலை சூழ்' பாசுரத்தின் அநுஸந்தாநம் ஸம்பவித்தது. அப்பொழுது கோஷ்டியி லிருந்த ஸ்வாமிகளுக் கெல்லாம் பரவஶமாக ஒரு உச்ச த்வநி ஏற்பட்டு, அவர்கள் அந்தப் பாசுரத்தை கானத்துடனும் தாளத்துடனும் ஸேவித்தார்கள். அந்த த்வநி பூமியையும் ஆகாஶத்தையும் அநுநாதம் செய்தது. அப்போது அந்தக் கோஷ்டியி லுள்ளவர்கள்,

'வெஞ்சொலாளர் காலதூதர் வீசுபாசம் வந்தென்மேல்
விழுந்தழிந்து யானயர்ந்து வீழ்வதற்கு முன்னநீ
அஞ்சலஞ்ச லஞ்சலென் றளிக்கவேண்டு மச்சுதா
அடியவற்கு மருளியக்கு மடியவர்க்கு மெய்யனே!'

என்று கோஷிக்கையில் இந்த ஸ்வாமியின் நிர்யாணம் நேர்ந்ததென்று அதை அவதானித் திருந்தவர்களிடமிருந்து நாம் கேள்விப்படுகிறோம். இந்த ஸம்பவம், பகவான், ப்ரஸ்துத மஹானைத் தமது திருவடிகளில் சேர்த்துக்கொண்டாரென்பதற்கு ஸூசக மன்றோ? இப்படிப்பட்ட மஹா புருஷனுடைய அநுஸந்தாநம் ச்ரேயஸ்கர மென்று எண்ணி நாம் இதைப்பற்றி இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கத் துணிந்தோம்.

ஈட்டில் ஒரு ரஸோக்தி

'ஆழ்வார்கள் எல்லாரும் க்ருஷ்ணாவதாரம் என்றவாறே போர மண்டியிருப்பார்கள். இதுக்கு ஹேது வென்?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, 'ஒருவனுக்குத் துக்கம் சில நாள் கழிந்தால் பொறுக்கலாம்; அணித்தானால் ஆறியிருக்கப் போகாதிறே; அப்படியே' அல்லாத அவதாரங்களைப்போ லன்றிக்கே ஸம காலமாகையாலே, 'ஒரு செவ்வாய்க் கிழமை முற்படப் பெற்றிலோம் பாவியேன்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே! என்னு மிழவாலே வயிற்றெரித்தலேயா யிருக்கும்' என்று அருளிச்செய்தார். இனித்தான் ராமாவதாரத்தில், தமப்பன் ஶம்பராந்தகனைய் ஏக வீரனா யிருப்பா னொருவன். பிள்ளைகள்தாங்கள் ஆண் புலிகள். குடிதானே வன்னிய மறுத்திருப்பதொரு குடி. இவையெல்லாம் மிகையாம்படி குணத்தாலே நாட்டை யெல்லாம் ஒரு மார்வெழுத்தாக்கிக் கொண் டிருப்பார்கள். ஆகையால் எதிரிகள் என்ற ஶப்தமு மில்லை. இங்கு அங்ஙனன்றிக்கே, தமப்பன் ஒரு ஸாது வ்ருத்தன். பிறந்தது கம்ஸன் சிறைக்கூடத்திலே. வளர்ந்ததும் அவன் அகத்தருகே. ஸ்ரீ ப்ருந்தாவநத்திலே எழும் பூண்டுக ளகப்பட அஸுர மயமாயிருக்கும். ரக்ஷக ரானவர்கள் ஓரடி தாழ நிற்கில், பாம்பின் வாயிலே விழும்படி யாயிற்று இவன்தன் படிகள் இருப்பது. அப்படியானால் வயிறெரியாதே செய்வதென்? இவர்கள் அக்காலத்திலே உணர்ந்து நோக்கப் பெற்றிலர்கள்; அவ்விழவுக்கு இன்றிருந்து நோவுபடுகிறார்கள்.

[வன்னிய மறுத்தல்— குறும்பான ஶத்ருக்களைச் சேதித்தல். ஒரு மார்வெழுத்தாக்கல்— எல்லாரையும் அடக்கி அடிமைகொள்ளல்.]

18253

			ரூ. அ.
		ப்பூர்	3—0
		யிலாப்பூர்	3—0
		மாசார்யர், வக்கீல், ஆரணி	3—0
		K. S. ஸௌந்தரராஜையங்கார், நாகப்பட்டினம்	3—0
12	,,	V. நாராயணையங்கார், விச்வேச்வரபுரம், பெங்களூர்	3—0
113	,,	V. கோபாலஸ்வாமி ஐயங்கார், விச்வேச்வரபுரம், பெங்களூர்	3—0
146	,,	N. நரஸிம்மையங்கார், அட்வொகெட், ஹைதராபாத்	5—0
28	,,	T. K. ஸ்ரீநிவாஸையங்கார், வலங்கிமான்	6—0
39	,,	T. R. வெங்கடாசார்யர், புதுக்கோட்டை	3—0
58	,,	A. க்ருஷ்ணராவ், செங்கல்பட்டு	3—0
30	,,	தீக்ஷிதர் நாராயணாசார்யர், தில்லஸ்தானம்	3—0
29	,,	A. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திருக்கோவலூர்	3—0
94	,,	S. V. ராகவன், ராஷ்பிஹாரி அவின்யூ, கல்கத்தா	3—0
734	,,	R. S. ராகவாசார்யர், மன்னார்குடி	3—0
739	,,	G. நரஸிம்மையங்கார், ஜாம்ஷெட்பூர்	3—0
796	,,	D. P. தாதாசார்யர், ப்ளீடர், கள்ளக்குரிச்சி	3—0
823	,,	R. V. ராஜகோபாலையங்கார், மயிலாப்பூர்	6—0
824	,,	V. R. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீநிவாஸபுரம், கோயம்புத்தூர்	1—8
826	,,	ஜயம்மாள், ஸ்ரீரங்கம்	3—0
827	,,	P. R. ஸ்ரீநிவாஸையங்கார், கும்பகோணம் ...	3—0
		மொத்தம் ரூ.	66—8

தமிழகத்தில் சிறவ...
லௌகிக வ்யவஹ...
முன்னை...

ஸ்ரீ ந்ருஸிம்ஹ...

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் ப...

இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 DEC 1948
MADRAS

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ.	20.
,, உட்புறம்	,,	,,	ரூ.	15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ.	10.

ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.